# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி7 திங்கட்கிழமை (23-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:239


❋ சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்போர் அரசிலிருந்து வெளியேறலாம்

❋ புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடரும்

# மக்கள் ஆணை கிடைத்தால் அரசமைப்பை மாற்ற முடியும்!

## நாடாளுமன்றத்தில் மூன்றில் இருபங்கு ஆதரவு இன்றியே செய்ய முடியுமாம்

### ஜனாதிபதி சந்திரிகா நேற்று அறிவிப்பு

கொழும்பு,ஜூலை23

✪ தற்போதைய அரசமைப்பை மாற்றியமைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் ஆணை கிடைக்குமானால் - நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாவிட்டால் கூட - அரசமைப்பை மாற்ற முடியும்.

✪ அரசில் அங்கம் வகிக்கும் எவரும் சர்வஜன வாக்கெடுப்பை விரும்பாவிட்டால் அதிலிருந்து வெளியேறலாம்.

✪ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

- ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்க மேற்கண்டவாறு நேற்று அறிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களுக்கு விளக்கமளிப்பதற்காக நேற்று கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பேசுகையிலேயே இந்தத் தகவலகளை அவர் வெளியிட்டார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும கூறியதாவது:-

தற்சமயம் நடைமுறையில் உள்ள அரசமைப்பை மாற்றியமைப்பதற்கான மக்களின் ஆணையைப் பெறுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த இருக்கின்றோம். இதில் மக்கள் ஆணை கிடைக்குமானால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாவிட்டாலும் கூட அரசமைப்பை மாற்ற முடியும்.

இது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்ற விவரங்களை விரைவில் வெளியிடவிருக்கிறேன்.

மக்களின் நலனுக்காக அரசமைப்புக்கு அப்பால் சென்றும்கூட நடவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

### அனைத்துத் தரப்புகளுடனும் பேசி

## வருட இறுதிக்குள் புதிய அரசமைப்பு: அமைச்சரவை கூட்டத்தில் முடிவு

கொழும்பு,ஜூலை23

சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி வருட இறுதிக்குள் புதிய அரசமைப்பை உருவாக்குவதென அமைச்சரவை நேற்று முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்று மாலை விசேடமாகக் கூடிய அமைச்சரவை எதிர்வரும் 21ஆம் திகதி நடத்தப்பட உள்ள சர்வஜன வாக்கெடுப்புப் குறித்து விரிவாக ஆராய்ந்தது.

அரசமைப்பை மாற்றுவது குறித்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

### சர்வஜன வாக்கெடுப்பு நடத்த

## உள்ளூராட்சித் தேர்தல் நிதியை பயன்படுத்துவதற்கு எதிராக மனு

### மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்

கொழும்பு,ஜூலை23

உள்ளூராட்சித் தேர்தலுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை சர்வஜன வாக்கெடுப்புக்கு பயன்படுத்தக்கூடாது என்று தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசு சட்சன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு மீதான விசாரணை நாளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

தேர்தல் சட்டத்தின் 66 ஆம் 69 ஆம் பிரிவுகளின்படி ஒரு தேர்தலுக்கென ஒதுக்கிய பணத்தை வேறு ஒரு தேர்தலுக்குப் பயன்படுத்த முடியாது என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-3-9)

## நடிகர் திலகம் சிவாஜியின் இறுதிக்கிரியைகள் இன்று

சென்னை,ஜூலை23

மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று அவரது பூதவுடல் தீயுடன் சங்கமமாகும்.

சென்னை தியாகராயநகர் செவாலியே சிவாஜி கணேசன் வீதியில் (பழைய போக் வீதி) உள்ள சிவாஜியின் 'அன்னை இல்லம்' வீட்டில் இருந்து இன்று காலை அவரது இறுதியாத்திரை ஆரம்பமாகும்.

பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பெசன்ட் நகரில் உள்ள மின்சாரத் தகன மையத்தில் தகனம செய்யப்படும்.

சிவாஜியின் மறைவையொட்டி தமிழகத்தில் நேற்றுத் திரையரங்குகள

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மீண்டும் இன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை23

கடந்த 10ஆம் திகதி மூடப்பட்ட யாழ்பல்கலைக்கழகம் கல்விச் செயற்பாட்டுக்காக இன்று மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவன் சி. திவ்வியன் கடந்த 2ஆம் திகதி கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து எழுந்த சூழ்நிலை காரணமாக யாழ். பல்கலைக் கழகம் கடந்த 10ஆம் திகதி மூடப்பட்டது.

பல்கலைக்கழகத்தைத் திறக்குமாறும் திவ்வியனை விடுதலை செய்யுமாறும் கோரி குடாநாட்டில் பரவலான மாணவர் போராட்டங்கள் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் இன்று வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை -

பல்கலைக்கழக மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவிருப்பதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

### சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக

## பல்கலை மாணவர் பகிஷ்கரிப்புப் போர்!

கொழும்பு,ஜூலை23

அடுத்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் மேற்கொள்ளவிருப்பதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கொஸ்வத்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரங்களில் தாம் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் -

சர்வஜன வாக்கெடுப்பன்று பெரிய அளவில் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நடத்தவிருப்பதாகவும் - அவர் மேலும் சொன்னார். (ம-3-9)

# பிரதமர் பதவி வழங்கினால் தேசிய அரசமைக்க ஆதரவு!

### ரணில் கூறியதாக ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை23

தமக்கு பிரதமர் பதவி வழங்கினால் தேசிய அரசு ஒன்றை அமைக்க 40 எம்.பிக்களின் துணையுடன் வந்து உதவுவதாக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் தெரிவித்ததாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

லேக்ஹவுஸ் வெளியீடான 'சண்டே ஒவ்சேவர்' பத்திரிகையின் 'பிஸ்னஸ் ருடே' என்ற பகுதியில் லூசியன் ராஜகருணநாயக்கவுக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி இப்படிக் கூறியுள்ளார் என்று இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி தம்முடன் நடத்திய இரகசியப் பேச்சுக்களின் போது இந்த விடயத்தை ரணில் தம்மிடம் தெரிவித்ததாகவும் -

ஜனாதிபதி மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ரணிலுடன் தொடர்புகொண்ட போது, அவர் ஜனாதிபதியின் தகவல்களை மறுத்துள்ளார் என்றும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

## குடாநாட்டில் மூன்று படையினர் காயம்

கொழும்பு,ஜூலை23

குடாநாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் மூன்று படையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

படையினரின் பிரதான விநியோகப் பாதையான பலாலி - யாழ்ப்பாணம் வீதியில் கட்டுவன் பகுதியில் இராணுவ வாகனத்துக்கு இலக்கு வைத்து கிளைமோர் கண்ணிவெடியைப் பொருத்த விடுதலைப் புலி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அடையாள அணிவகுப்பு இன்று

கொழும்பு,ஜூலை23

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் எதிர்க்கட்சிகள் நடத்திய அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது பொலீஸாரின் தாக்குதலில் உயிரிழந்த கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியைச் சேர்ந்த மஞ்சுள பிரசாத் என்ற யுவதியின் மரணம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள மூன்று பொலீஸாரும் இன்று அடையாள அணிவகுப்பில் ஆஜர்படுத்தப்பட இருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இன்ஸ்பெக்டர் சலிந்த சமரக்கோன், சப். இன்ஸ்பெக்டர் அனுர சில்வா, கான்ஸ்டபிள் நளின்வத்ததெனிய ஆகியோர் இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவர் என்றும் -

அவர்களை அடையாளம் காண்பதற்கான அடையாள அணிவகுப்பும் இன்று இடம்பெறும் என்றும் -

சிரேஷ்ட பொலீஸ் அதிபர் றின்சி பெரேரா தெரிவித்தார். (ம-3-164)

# குடாநாட்டை மீளக் கைப்பற்றப் புலிகள் தயார் என்ற உளவுத் தகவலால் படைகள் அதியுயர் உஷார் நிலையில்!

## மாத முற்பகுதியில் வைக்கப்பட்டிருந்ததாக இராணுவ விமர்சகர் தெரிவிப்பு

**நேற்றைய 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் எழுதிய கள நிலைவரம் பற்றிய கட்டுரையின் தமிழாக்கம்.**

நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பு கடந்த 18 வருடப் பிரிவினைப் போரில முன்னெப்போதுமில்லாத அதி உச்ச உஷார் நிலையில மூன்று வாரங்களுக்கு முன் வைக்கப்பட்டிருந்தது என்பது பெரும்பாலான இலங்கையர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் நகரில் கடந்த வியாழனன்று நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் பார்க்க அரசை அதிகம் கவலை கொள்ள வைத்த விடயம் இதுதான்.

யாழ்ப்பாண நகரத்தை மீளக் கைப்பற்றுவதற்கு மிகமோசமான தாக்குதல் நடவடிக்கை ஒன்றுக்குப் புலிகள் கெரில்லாக்கள் தயாராகியிருப்பதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து அபாய மணி எழுப்பப்பட்டது. ஜூலை முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் இது நடக்கலாம் எனக் கூறப்பட்டது.

இன்னும் பரகசியமாகாத - பல திடீர்த் திருப்பங்களைக் கொண்ட - இந்த நிகழ்வுகள் ஜூன் 27 ஆம் திகதி தொடங்கின. தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரத்துங்க பிரிட்டனுக்குச் சென்றிருந்தார். நாட்டின் பதில் தலைவர் என்ற கோதாவில் செயற்பட்ட பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க ஜனாதிபதியின் பொறுப்புக்களையும் கவனித்து வந்தார்.

### பிரதமருடன் அவசர சந்திப்பு

புதன்கிழமையன்று அலரிமாளிகையில் உள்ள பிரதமர் விக்கிரம நாயககவின் 'ஹொட் லைன்' தொலைபேசி அலறியது. அது பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் அழைப்பு. அவர் அவசர சந்திப்பு ஒன்றுக்குச் சந்தர்ப்பம் கோரினார். அனுமதி உடனடியாக வழங்கப்பட்டது. அலரி மாளிகைக்கு கொடித்துவக்கு வந்து சேர்வதற்கு நேரம் எடுக்கவில்லை. அவருடன் விசேட பிரிவின் தலைவர் டி.எஸ்.ஸி கொம்பலவிதானவும் அப்பிரிவின் பதில் பணிப்பாளரான பொலீஸ் அத்தியட்சகர் பெர்னாட் சில்வாவும் கூட வந்தார்.

இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றில் இருக்கின்ற பிரிவுகளுக்கு மேலதிகமாக இயங்கும் மூன்று அரச புலனாய்வுப் பிரிவுகளுள் விசேட பிரிவும் (Special Branch) ஒன்று அந்த விசேட பிரிவு பொலீஸ் மா அதிபருக்குக் கீழ் இயங்குகின்றது.

விசேட பிரிவின் தலைவர் பிரதி பொலீஸ் மா அதிபர் கொம்பலவிதானவிடமிருந்து தமக்குக் கிடைத்த அறிக்கையை கொடித்துவக்கு பிரதமர் விக்கிரமநாயக்கவுக்கு விளக்கினார்.

### உளவுத் தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றத் திட்டமிட்டிருப்பதாகவும் அதற்காகத் தனது உறுப்பினர்களை உரிய இடங்களில் நிலைகொள்ளச் செய்வதில் அவர் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது. தாக்குதல்கள் ஜூலை முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் மேற்கொள்ளப்படவுமிருந்தன.

இந்தத் தகவலால் குழப்பமடைந்த பிரதமர் விக்கிரமநாயக்க உடனடியாகப் பாதுகாப்பு அதிகாரிகளின் தலைவரான ஜெனரல் றொஹான் தளுவத்தவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். பொலீஸ் அதிபரையும், அவரது விசேட பிரிவின் தலைவரையும் சந்திக்கும்படி பிரதமர் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து உடனடிப் பதில் நடவடிக்கைகளை எடுக்கும்படியும் பிரதமர் பணித்தார்.

லண்டனுக்குத் தொலைபேசி மூலம தொடர்பு கொண்டு ஜனாதிபதி குமாரத்துங்கவுக்கும் அவர் நிலைமையை விளக்கினார்.

பதவியை விட்டு விலகிவிட்டார் என்ற பலத்த வதந்திகளைக் கிளப்பக் காரணமான வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு, முதல நாள்தான் ஜெனரல் தளுவத்த தமது கடமைகளுக்குத் திரும்பியிருந்தார்.

பொலீஸ் மா அதிபருடனும் அவரது உளவுப் பிரிவின் மூத்த தலைவர்கள் இருவருடனும் கலந்தாலோசனையில் அவர் ஈடுபட்டார்.

அதன் விளைவாக, கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்தில் ஜெனரல் தளுவத்த தலைமையில் உயர்மட்டக் கலந்தாலோசனைக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் கொடித்துவக்குடன் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

தொடரும் பிரிவினைப் போரில் அரசுக்கு மிகமோசமான நெருக்கடியை ஏற்படுத்திய - யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றுவதற்காகக் கடந்த வருடம் புலிகள் எடுத்த - முயற்சி தொடர்பான நினைவுகள், பாதுகாப்பு அமைப்பில் உள்ளவர்களின் மனதில் இன்னும் பசுமையாக உள்ளன. அதிகரித்து வந்த அச்சம் அப்போது நட்பு நாடுகளிடம் இராணுவ உதவி கோரும நிலைக்கு அரசைத்தள்ளின. அவசர நிலை ஒன்று ஏற்பட்டால் யாழ்.குடாநாட்டிலிருந்து துருப்புக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான அவசரகாலத் திட்டம் ஒன்றுகூட அப்போது தயாரிக்கப்பட்டது.

இந்தத் தடவை எந்த வாய்ப்புக்கும் ('சான்ஸுக்கும்') சந்தர்ப்பமளிக்க அவர்கள் விரும்பவில்லை. அதனால் தான் எச்சரிக்கை எதனையும் மிகக் கடுமையாகக் கருதாமல் விலக்கி விடப்படவில்லை.

### எச்சரிக்கை நிலையில் துருப்புகள்

கடும் எச்சரிக்கை நிலையில் துருப்புகள் வைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்புப் படையினரின் லீவுகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டன. கடமையின் நிமித்தம் கொழும்புக்கு வர வேண்டியிருந்த சிரேஷ்ட அதிகாரிகள் பலர், யாழ்.குடாநாட்டில் தங்களது பணிநிலையில் தொடர்ந்து தங்கியிருக்கும்படி பணிக்கப்பட்டனர். புலி கெரிலலாக்களின் ஏதேனும் தாக்குதல்கள் இடம்பெற்றால் அவற்றை முறியடிப்பதற்கான பல முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### வான் தாக்குதல்

புலிகளின் இலக்குகள் மீது வான் தாக்குதல்களை நடத்துவது அவற்றுள் முக்கியமானதாக அமைந்தது. பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொம்பலவிதான மற்றும் பொலீஸ் மா அதிபர் கொடித்துவக்கு ஆகியோர் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையிலும் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலும் அந்த இலக்குகள் அடையாளம் காணப்பட்டன.

கடந்த ஏப்ரலில் தோல்வியில் முடிவடைந்த 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கையை அடுத்து புலிகள் கெரிலாக்களின் நிலைகள் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு விமானப் படைக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருந்தது.

நோர்வேயின் சமாதான முயற்சிகளை ஒட்டியே இவ்வாறு செய்யப்பட்டது. ஆனால், இதனால் தாக்குதல்களுக்கு அல்லது வான் வழிக் கவசம் மூலம் உதவும்படி விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு இணங்க முடியாத நிலைக்கு விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ஜெயலத் வீரகொடி தள்ளப்பட்டார். குறிப்பாக, கிழக்கில், பொலீஸ் கொமாண்டோ அணியான விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின் போது இந்நிலை ஏற்பட்டது.

### பொலீஸ் மா அதிபரின் அறிக்கை

பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொம்பலவிதானவின் அறிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது:-

*அரசின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாண நகரையும் ஏனைய பிரதேசங்களையும் மிகவிரைவில் தாக்கி மீளக் கைப்பற்றுவதற்கான திட்டங்களை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தயாரித்திருப்பதாக நம்பிக்கையான தகவல்கள் கிடைத்திருக்கின்றன.*

*அரசியல் மற்றும் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களைத் தவிர்த்து, ஏனைய யுத்தம் புரியும் உறுப்பினர்கள் அனைவரையும் கொண்ட அணிகள் ஜூன் 16 ஆம் திகதி கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், பரந்தன், முழங்காவில் மற்றும் துணுக்காய் - வெள்ளாங்குளம் பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்டு புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவில் நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றன.*

*தீபன் பாப்பா தலைமையிலான சார்ள்ஸ் அன்ரனி பிரிகேட் -*

*முழங்காவிலிலிருந்து சொர்ணம் தலைமையில் சொர்ணம் படை அணி -*

*துணுக்காய் வெள்ளாங்குளத்திலிருந்து பானு தலைமையிலான கிட்டு - விக்டர் (பீரங்கி) பிரிகேட் -*

*கடாபி தலைமையிலான சிறுத்தைப் புலி பிரிகேட் -*

*நெடுஷா தலைமையிலான மகளிர் அணி -*

*என்று பல அணிகள் சேர்ந்து - அவற்றின் ஆள்வலுவின் அடிப்படையில் -*

*ஒவ்வொன்றும் 750 துருப்புகளைக் கொண்ட - மூன்று பட்டாலியன்களை புதுக்குடியிருப்பில் உருவாக்கின.*

*இதற்கு முன்னர் - புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த காலத்தில் - இந்த அணிகள் விசேட பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. ஜூன் 16 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த மூன்று பட்டாலியன்களும் புதுக்குடியிருப்பில் இருவாரகால மாதிரி (மொடல்) பயிற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன.*

*இந்த 'மொடல்' பயிற்சிக்குப் பின்னர் பெரும் தாக்குதல் நடத்தப்படும் என நம்பப்படுகின்றது. அனேகமாக ஜூன் 30 ஆம் திகதிக்குப் பின்னர் ஜூலை முதல் வாரத்தில் இது நடப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.*

*ஜூலை 5 ஆம் திகதி 'கரும்புலிகள் தினத்தை' விடுதலைப் புலிகள் அனுஷ்டிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தினத்தில் புலிகள் தாக்குதல் நடத்துவதும் வழமை.*

### தாக்குதல் திட்டம்

*மேற்படி மூன்று பட்டாலியன்களும் ஒரு தாக்குதல் அணியாக இணைந்து நாகர்கோயிலில் உள்ள இராணுவ பிரிகேட்டைத் தாக்கி அதனைக் கைப்பற்றுவதுதான் திட்டம்.*

*அந்தப் பிரிகேட்டை கைப்பற்றிய பின்னர் ஓரணி அம்பன், குடத்தனை, வரணி, அந்தணத்திடல், புத்தூர் ஊடாக நல்லூரை நோக்கிச் செல்லும்.*

*இரண்டாவது தாக்குதல் அணி எழுதுமட்டுவாழ், கண்டி வீதி, மிருசுவில், கொடிகாமம், சாவகச்சேரி, நுணாவில், கைதடி வழியாக நாவற்குழிக்கு முன்னேறும்.*

*கடற்புலிகளைக் கொண்ட மற்றொரு உதவி வழங்கும் அணி பூநகரியில் நிலைகொண்டிருக்கும். அவர்கள் குருநகர் இறங்குதுறை, தச்சன் தோப்பு வழியாக அரியாலைக்கு நகர்வர்.*

*பூநகரி பழைய கோட்டைக்கு அருகில் உள்ள பெரியமரத்துக்குப் பக்கத்தில் நிலைகொண்டிருக்கும் புலிகளின் பீரங்கி அணி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக, மேலேயே குறிப்பிட்டபடி யாழ்ப்பாண நகரத்தை நோக்கி மூன்று முனைகளில் தாக்கும் மூன்று தாககுதல் அணிகளுக்கும் உதவியாகப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தும்.*

*தங்களின் முக்கிய யுத்த வீரரான கருணா மற்றைய புகழ்பெற்ற வீரர்களான ரூபர்ட், ராம், ஜிம்கெலி, தாத்தா, மனோ மாஸ்ரர் போன்றோர் சகிதம் கிழக்கில் நிலைகொண்டிருப்பதால், பாதுகாப்புப் படைகள் அதனைப் பிழையாக உணர்ந்து, யாழ்ப்பாணத்தில் ஒரு தாக்குதல் நடக்கும் என்பதை எதிர்பார்க்கமாட்டார்கள் என்பதே புலிகளின் சிந்தனைப்போக்காகவுள்ளது.*

*பாதுகாப்புப் படைகளை மேலும் தவறாகத் திசைதிருப்பும் நோக்குடன் கருணாவும் ஏனையோரும் கிழக்கில் தமது தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்துவர். அனைத்துக் கவனமும் கிழக்கில் இருக்க நாகர்கோயில் மற்றும் யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் ஆரம்பமாகும்.*

*ஜூன் இரண்டாம் திகதி பிரபாகரன் முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளை அம்மன் கோயிலுக்கு விஜ*

(14 ஆம் பக்கம் பார்க்க)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வன் இ.சஞ்ஜீவன்

கே.கே.எஸ். வீதி கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த ரட்ணைசங்கர் – **நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்ஜீவன்** தனது முதலாவது பிறந்த நாளை இன்று திங்கட்கிழமை (23–07–2001) தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா (இராசரத்தினப் பத்தர் அன் சன்ஸ் உரிமையாளர்), அம்மா, அப்பப்பா, அம்மப்பா (சுந்தரலிங்கப் பத்தர் அன் சன்ஸ் உரிமையாளர்), அம்மம்மா, பெரியமாமா (தர்மி வீடியோ உரிமையாளர்), சின்னமாமா (மகேந்திரா ஜுவலர்ஸ் உரிமையாளர்), நடுமாமா (ஆசிரியர்), குட்டிமாமா (சன் ஜுவலர்ஸ் உரிமையாளர்), சித்தப்பா (ஆசிரியர்), அத்தைமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் வல்லிபுர ஆழ்வார் அருள் பெற்று ஆரோக்கியத்தோடும் தீர்க்காயுளோடும் சிறப்புற்று நீடூழி வாழ மனதார வாழ்த்துகிறார்கள்.

*இராசரத்தினப் பத்தர் அன் சன்ஸ்*
*கே.கே.எஸ். வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

- இ.ரட்ணைசங்கர்.
(அப்பா)

(90355)



## ஆசிரியர் தேவை

*தரம்:– 6, 7, 8, 9, 10, 11ஆம் ஆண்டிற்கு*
*பாடம்:– தமிழ், சமயம்*
*01.08.2001 இற்கு முன் பி.ப. 3.30 –6.00 வரை சான்றிதழ்களுடன் நிறுவனத்துக்கு சமுகம் தரவும்.*

நிர்வாகி,
மது கல்வி நிறுவனம்,
டச் றோட்,
இருபாலை.

(90350)



## நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், மீனா,
சுவலட்சுமி, வடிவேல்
நடித்த
இனிய பாடல்கள் நிறைந்த

**மாயி** (ரீலஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30
(90256) (புதிய நேரம்)



## ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் குதூகல ஆரம்பம
விஜயகாந்த், சாக்ஷி,
பிரகாஷ்ராஜ்,
ரம்யாகிருஷ்ணன், நாசர்
மற்றும் பலர் நடிப்பில

**வாஞ்சிநாதன்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

(C/17443)



## 21 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 - 03 - 1966



உதிர்வு 23 - 07 - 1980

### செல்வி மாலினி நல்லையா

என்றும் பாசத்தின் உறைவிடமாய்
என்றும் பண்பின் இலக்கணமாய்
என்றும் அமைதியின் திருவுருவமாய்
என்றும் எங்கள் உள்ளங்களில் வாழ்கிறீர்.

தகவல்:
N.பிரகலாதன் (கண்ணன்)
*தாவடி வடக்கு,*
*காளிகோயிலடி,*
*கொக்குவில்.*

*நித்தமும் உன் நினைவுடன்*
அப்பா, அம்மா,
சகோதரிகள், சகோதரன்
மற்றும் உற்றார்,
உறவினர்கள்.

(C/17527)



# அரசியல் மேடையில் அரங்கேறாத சிவாஜி!

நடிகர் திலகம், சிம்மக்குரலோன், நடிப்புப் பல்கலைக்கழகம் இப்படி எத்தனையோ புகழாரங்கள் சூட்டப் பட்டவர் சிவாஜிகணேசன். முதல் படமான பராசக்தி தமிழகத்தில் 42 வாரங்கள் தொடர்ந்து ஓடிச் சாதனை படைத்தது.

அதன் பின்னர் சிவாஜியின் எத்தனையோ படங்கள் அவரது நடிப்புக்காகவே வெள்ளிவிழாக் கண்டன.

நடிப்பில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த சிவாஜியால் அரசியலில் ஏனோ பிரகாசிக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் திராவிடப் பரிமாணமான சுய மரியாதை இயக்கத்தில் இணைந்து அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி ஆகியோருடன் பணியாற்றினார் சிவாஜி.

ஆனால் காங்கிரஸ் காரராக இருந்த எம்.ஜி.ஆர்., அப்போது பட உலகில் திராவிட ஆதிக்கம்

## ராஜரிஷி

மேலோங்கி வந்த சமயத்தில் திராவிடக்கட்சியில் இணைந்து கொண்டார்.

இந்நிலையில் ஒருமுறை திருப்பதி வெங்கடேசப் பெருமானைத் தரிசிக்கச் சென்றார் சிவாஜிகணேசன்.

இது கடவுள் இல்லை என்ற கொள்கையையுடைய திராவிட இயக்கத்தினருக்கு கோபத்தை ஏற்படுத்தியது. விளைவு, திருப்பதியிலிருந்து சிவாஜி சென்னை திரும்பிய போது, 'திருப்பதி கணேசா, திரும்பிப்பாரப்பா' என்ற சுவரொட்டிகளே அவரை வரவேற்றன. திராவிடத் தலைவர்களான அண்ணா, கருணாநிதி ஆகியோரின் வசனங்களை பேசி நடித்துப் புகழ்பெற்றுவிட்டு, இயக்கத்தின் கொள்கைக்கு விரோதமாக நடப்பதாக சிவாஜிமேல் குற்றஞ் சாட்டி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

அந்தச் சுவரொட்டிகளில் இருந்த அடுக்கு மொழித் தமிழ் வசனங்கள், தனது நடிக நண்பரின் வளர்ச்சிக்காக, சிவாஜியை கட்சியைவிட்டு விலக்க விரும்பிய தற்போதைய தமிழக மூத்த அரசியல்வாதியின் கைவண்ணம் என்று பேச்சு அடிபட்டது.

அத்துடன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும், நடிகர் திலகம் சிவாஜியும் இணைந்து நடித்த ஒரே படமான 'கூண்டுக்கிளி' திரைப் படத்தில் எம்.ஜி.ஆர். ஏற்ற கதாபாத்திரம் நல்லவனாகவும், சிவாஜியின் பாத்திரம் கெட்டவனாகவும் சித்திரிக்கப்பட்டிருந்தது.

திரைப்படங்கள் மூலம் ஏழைப் பங்காளனாக தனது 'இமேஜை' வளர்க்கும் எம்.ஜி.ஆரின் முயற்சி கூண்டுக்கிளியிலும் வெற்றிபெற்றது.

ஆனால் நடிப்பு ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட சிவாஜி தனது 'இமேஜை' பற்றிக் கவலைப் படாமல் குடிகாரனாக - சந்தேகத்தினால் மனைவியைக் கொடுமைப்படுத்தும் கணவனாக - திருடனாக எனப் பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்தார்.

இதனால் சிவாஜியின் நடிப்பை ரசித்த தமிழக மக்கள் அவரை அரசியல் தலைவராக ஏற்கவில்லை.

திராவிட இயக்கத்திலிருந்து விலகிய உடனேயே காங்கிரஸில், காமராஜரின் தொண்டராகச் சேர்ந்து கொண்டார் சிவாஜி.

அந்தச் சமயத்தில் அண்ணா, கருணாநிதி ஆகியோரின் தலைமையிலும், எம்.ஜி.ஆரின் கவர்ச்சியாலும், தி.மு.க. எழுச்சிபெற்று, காங்கிரஸை மண்கவ்வ வைத்த நேரமது.

ஆகவே அப்போது அரசியலில் தீவிர ஆர்வம் காட்டாத சிவாஜி நடிப்பில் மட்டுமே முழுமூச்சாக இறங்கினார்.

அதுவும் காமராஜரின் மறைவுக்குப் பின்னர் அரசியல் என்பதன் வாசனையே இல்லாதவராக, நடிப்பே தொழில் என்றிருந்தார் சிவாஜி.

இந்த வேளையில் மாபெரும் மக்கள் சக்தியாக உருவெடுத்த எம்.ஜி.ஆர். தி.மு.கவிலிருந்து விலக்கப்பட்டு அ.தி.மு.கவை தொடங்கி எழுபதுகளில் தமிழக அரசியலில் முக்கிய சக்தியானார்.

அந்தச் சமயத்தில் மத்தியில் ஆளும் இந்திரா காங்கிரசுடன் சுமுக உறவையும் எம்.ஜி.ஆர். பேணி வந்தார்.

இப்படியொரு சூழ்நிலையில் 'ரிக்ஷாகாரன்' திரைப்படத்தில் சிறப்பாக நடித்ததற்காக எம்.ஜி.ஆருக்கு மத்திய அரசு விருது வழங்கியது. ஆனால் இந்திராகாந்தியைப் பின்னாளில் காமராஜர் எதிர்த்தபோது, காமராஜருக்கு ஆதரவு தெரிவித்த சிவாஜிக்கு இறுதிவரை சிறந்த நடிகர் விருது மத்திய அரசால் வழங்கப்படவேயில்லை.

ஆயினும் இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையின் நியமன உறுப்பினராகும் வாய்ப்பு மட்டும் சிவாஜிக்கு காங்கிரஸால் வழங்கப்பட்டது. விளையாட்டு வீரர்கள், பத்திரிகையாளர்கள், கலைத்துறையினர் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் ராஜ்யசபா உறுப்பினர் பதவிகளில் கலைத்துறையினருக்கான நியமன உறுப்பினராக சிவாஜி 90 களின் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில் தமிழகத்தைப் பேரிடியாகத் தாக்கிய எம்.ஜி.ஆரின் மறைவின் பின்னர் - அப்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாக - நேரடி அரசியலில் கால்வைத்தார் சிவாஜி.

தமிழக மக்கள் முன்னேற்ற முன்னணி என்ற கட்சியைத் தொடங்கிய சிவாஜி, எம்.ஜி.ஆரின் துணைவியார் ஜானகி அம்மையாரின் அ.தி.மு.க. அணியுடன் கூட்டுவைத்து சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அணி ஒருபுறம், தி.மு.க. அணி மறுபுறம் என்று அரசியல் சித்து வேலைக்காரர்கள் இருவரின் இடையேயும் - அரசியலில் நடிக்கத் தெரியாத - சிவாஜியும், ஜானகி அம்மாவும் படுதோல்வியைச் சந்தித்தனர்.

அத்துடன் சிவாஜியின் அரசியல் வாழ்க்கை அவருடைய 'ஆண்டவன் கட்டளை' படப் பாடலான 'சட்டி சுட்டதடா கைவிட்டதடா' என்று ஆனது.

சிவாஜியின் நடைக்காகவே அவருடைய படங்களைப் பார்த்த தமிழக ரசிகர்கள், எங்கே அவர் அரசியலுக்குள் சென்றுவிட்டால் நடிப்புக்கு இலக்கணம் வகுத்த அந்தக் கலைஞரின் நடிப்புத் திறமையை திரைப்படங்களில் காணமுடியாது போய்விடுமோ என்ற கவலையாலோ என்னமோ அரசியலில் மட்டும் அவரை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள். ☆

## கூட்டுக்குடும்பமாக...

மறைந்த நடிகர் சிவாஜி கணேசனின் மனைவி பெயர் கமலா அம்மாள்.

இவர்களுக்கு சாந்தி, தேன்மொழி, ஆகிய மகள்களும், ராம்குமார், பிரபு ஆகிய மகன்களும் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகிவிட்டது.

தஞ்சாவூரில் உள்ள சூரக்கோட்டைப் பண்ணை மற்றும் சென்னையில் சாந்தி திரையரங்கு உட்பட சில நகரங்களில் உள்ள சிவாஜியின் திரையரங்குகள் ஆகியவற்றை மூத்த மகன் ராம்குமார் மேற்பார்வையிட்டு வருகிறார்.

இளைய மகன் பிரபு, தந்தையுடன் நடித்த 'சங்கிலி' திரைப் படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமாகி இன்றுவரை தொடர்ந்து நடித்து வருகிறார்.

சிவாஜியின் குடும்பத்தினர் அனைவரும், சென்னை தியாகராயநகர், போக வீதியில் உள்ள 'அன்னை இல்ல'த்தில் கூட்டுக்குடும்பமாக வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பலவீனமடைந்த இதயம்

புகழின் உச்சியில் இருந்த காலத்தில் சிவாஜி ஓய்வு ஒழிச்சலின்றி தொடர்ந்து நடித்ததால் இறுதிக்காலத்தில் [illegible] இதயம் [illegible] மடைந்திருந்ததாக, சிவாஜியின் குடும்ப மருத்துவர் [illegible] தெரிவித்தார்.

[illegible] நியதாவது:-

திரையுலகில் ஒரு 'கால்ஷீட்' 8 மணி நேரம் என்றால் தினமும் மூன்று கால்ஷீட்டிலும் தொடர்ந்து நடித்தார் சிவாஜி. அங்கங்கே கிடைக்கும் நேரத்தில் உறங்கி [illegible] வந்தார்.

அன்றைய காலகட்டத்தில், ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடப்பதால், பாரிய மின் விளக்குகளின் வெப்பம் உட்பட பல தாக்கங்களையும் அவரது உடல் எதிர்கொள்ள நேர்ந்தது. அப்போது ஏற்பட்ட தாக்கங்களாலேயே கடந்த 10 ஆண்டுகளாக சிவாஜியின் இதயம் மிகவும் பலவீனமாக இருந்தது. இவ்வாறு டாக்டர் ராதா கிஷ்ணன் தெரிவித்தார்.

## ஜெயலலிதா காரணமாம்?

சிவாஜியின் உடல்நிலை சமீபகாலமாக மோசமான நிலையை அடைந்ததுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் ஒரு விதத்தில் காரணம் என்று கூறப்படுகிறது.


சிவாஜியின் மகள் வயிற்றுப் பேர்த்தியை, ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரன் திருமணம் செய்திருந்தார்.

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் பலகோடி ரூபா செலவில் இடம்பெற்ற அந்தத் திருமணம் 'புகழ்' பெற்றது.

அதன் பின்னர் சுதாகரனுக்கும் ஜெயலலிதாவுக்குமிடையே உறவு கசந்தது.

மீண்டும் ஜெயலலிதா ஆட்சியைப் பிடித்ததும், சமீபத்தில் பல்வேறு வழக்குகளின் கீழ் சுதாகரனை பொலீஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.போதைப் பொருள் வைத்திருந்ததாகவும் அவர் மீது வழக்குப் போடப்பட்டுள்ளது.

இதனால் தனது பேர்த்தியின் நிலை குறித்து வருந்தியதே, சிவாஜியின் உடல்நிலையை மோசமாக்கியதாக திரையுலக வட்டாரங்கள் தெரிவித்தன.



# கடத்தப்பட்ட 22 பொலீஸாரை நேபாள தீவிரவாதிகள் விடுவிப்பு

## அரசுடன் பேச்சு நடத்தவும் முயற்சி

காத்மண்டு,ஜூலை23

நேபாளத்தில் தாம் கடத்திச் சென்ற பொலீஸாரில் 22பேரை மாவோயிஸத் தீவிரவாதிகள் நேற்று முன்தினமிரவு விடுவித்தனர். ஜி.பி.கொய்ராலா பிரதமர் பதவியிலிருந்து விலகியதையடுத்தே, தீவிரவாதிகள் இந்த நல்லெண்ண நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 12ஆம் திகதி கொலேரி பொலீஸ் நிலையத்திலிருந்து கடத்தப்பட்ட 71 பொலீஸாரில் 12பேர் மேற்கு ரோஷா மாவட்டத்தில் விடுவிக்கப்பட்டனர்.

எஞ்சிய பொலீஸார் தீவிரவாதிகளின் வசமே உள்ளனர்.

இதற்கிடையில், மாவோயிஸ தீவிரவாதிகள் பொலீஸாரை பணயக் கைதிகளாக வைத்துள்ள மூவா கிராமத்தை நேபாள இராணுவம் முற்று கையிட்டுள்ளதாக அரசு கூறுகிறது.

இந்த நிலையில் சில நாள்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட 10 பொலீஸ்காரர்களை கிழக்கு நேபாளத்தில் தீவிரவாதிகள் விடுத்திருப்பதாகவும்-

மாவோயிஸ தீவரவாதிகளுக்கும், புதிய அரசுக்கும் இடையே பேச்சுக்கான சூழ்நிலையை உருவாக்க தீவிரவாதிகளின் இரண்டு பிரதிநிதிகள் தலைநகர் காத்மண்டுவுக்கு வந்துள்ளதாகவும் -

சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன. (ஒ)

## தமிழகப் பொலீஸாரிடம்

# 6 ஆண்டுகளின் பின்னர் பிடிபட்ட ஆயுள் தண்டனைத் தீவிரவாதி

சென்னை,ஜூலை23

ஆறு ஆண்டுகள் தலைமறைவாக இருந்த ஆயுள் தண்டனை பெற்ற தீவிரவாதியை கடந்த வெள்ளிக்கிழமை தமிழகப் பொலீஸார் கைது செய்தனர்.

1987 ஆம் ஆண்டு நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழக்கக் காரணமான, சென்னை - திருச்சி மலைக்கோட்டை விரைவு ரயிலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் முக்கிய குற்றவாளியான தேன்தமிழன் என்பவருக்கு சென்னை உயர் நீதிமன்றம் அப்போது ஆயுள் தண்டனை விதித்திருந்தது.

1995 ஆம் ஆண்டில் தனது மகளின் திருமணத்துக்காக 30 நாள்கள் அனுமதி பெற்று சிறையில் இருந்து வெளியே வந்த தேன்தமிழன் அதன்பிறகு சிறைக்குத் திரும்பாமல் தப்பித்தார்.

கடந்த வெள்ளி மாலை ஜெயம்கொண்டானில் அவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். (ஒ)

## உலக அரங்கில்

### பிரிட்டிஷ் பிரதமர் விரைவில் இந்தியா விஜயம்

லண்டன், ஜூலை23

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

பிரிட்டனுக்கான இந்தியத் தூதுவர் நரேஷ்வர் தயாள் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பிளயரின் இந்திய விஜயத்தின் போது சர்வதேச பயங்கரவாதம், கல்வி, பாதுகாப்பு, அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இருநாடுகளுக்கு இடையிலும் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-10)

# முப்பது பொருள்களுக்கு ஆப்கானிஸ்தானில் தடை

## இஸ்லாத்துக்கு எதிரானவையாம்

காபூல்,ஜூலை23

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்கள், இஸ்லாமிய நெறிகளுக்கு விரோதமானவை என்று கூறி சீட்டுக்கட்டு, உதட்டுச்சாயம், நகப்பூச்சு, கழுத்துப்பட்டி ஆகியவை உட்பட 30 பொருள்களை நாட்டுக்குள் எடுத்துவரவும், பயன்படுத்தவும் தடை விதித்துள்ளனர்.

இந்தத் தடை உத்தரவை தலிபான் தலைவர் முல்லா மொகமட் ஓமர் அறிவித்ததாக, இஸ்லாமாபாத்திலிருந்து ஒலிபரப்பப்படும் 'ஷரியத்தின் குரல்' வானொலி தெரிவித்தது.

மனிதத் தலைமுடியிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருள்கள், பன்றி மாமிசத்தில் தயாரிக்கப்படுபவை, இசைக்கருவிகள், 'டிஷ் அன்ரனாக்கள்', ஒலி, ஒளி நாடாக்கள், வாணவேடிக்கை வெடிப்பொருள்கள், சிலைகள், தனி மனிதர்களின் புகைப்படங்கள், வாழ்த்து அட்டைகள், நவநாகரிகம் தொடர்பான கையேடுகள் போன்றவையும் தடைசெய்யப்பட்ட பொருள்களில் அடங்குகின்றன.(ஒ)

## கருணாநிதிக்கு கறுப்புப் பூனை பாதுகாப்பு

சென்னை,ஜூலை23

தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதிக்கு விரைவில் கறுப்புப் பூனைப் படையின் பாதுகாப்பு அளிக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு இந்தப் பாதுகாப்பை கருணாநிதிக்கு வழங்க முடிவு செய்துள்ளது. மத்திய அமைச்சர்கள் முரசொலிமாறன், டி.ஆர்.பாலு ஆகியோருக்கும் விசேட பாதுகாப்பு அளிக்கப்படவுள்ளது.

கருணாநிதிக்கு ஏற்கனவே தமிழக அரசு மாநிலப் பொலீஸ் பாதுகாப்பு அளித்திருந்தது.

எனினும் அண்மையில் கருணாநிதி தமிழகப் பொலீஸாரால் அடாவடித்தனமாகக் கைது செய்யப்பட்ட போது அவரது பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த பொலீஸார் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதனை அடுத்து தமிழக அரசு வழங்கிய பொலீஸ் பாதுகாப்பு தனக்குத் தேவையில்லை என்று மு.கருணாநிதி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

## ஆர்ப்பாட்டம்

மும்பாய்,ஜூலை23

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் பூனைக்கு 'இந்தியா' என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியாவின் மும்பாய் நகரில் கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. 'இந்தியர்கள் பூனைகள் அல்ல, சிங்கங்கள்' என்று எழுதப்பட்ட வாசக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். (ஒ)

### தேசிய கல்வியியற் கல்லூரிக்கான

# கட்டடவேலையைப் பொறுப்பேற்க

# ஒப்பந்தகாரர் எவரும் இங்கு இல்லை

அச்சுவேலி, ஜூலை 23

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கான புதிய கட்டடத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்க பொருத்தமான ஒப்பந்தகாரர் முன்வராததால், கட்டட வேலைகளை ஆரம்பிப்பதில் தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கட்டடத்தை கோப்பாயில் அமைப்பதற்கான காணியை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியதும் —

கட்டட வேலைகளுக்கான நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதும் —

தெரிந்தவையே.

கட்டடநிர்மாணிப்புக்கென நிதி வழங்கிய சர்வதேச நிறுவனம் ஒப்பந்த வேலையை பகுதி பகுதியாகப் பிரித்து வழங்கவிரும்பவில்லை என்றும் —

இதனால் —

கட்டட ஒப்பந்தவேலையை முழுமையாகப் பொறுப்பேற்கக்கூடிய ஒப்பந்தகாரரிடம் வேலைகளை ஒப்படைக்க வேண்டி இருப்பதாகவும் —

தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கட்டட வேலைகளை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் ஒருவருடப் பூர்த்தியை நிறைவு செய்த தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பல்வேறு வசதியீனங்களின் மத்தியில் இயங்கி வருவது தெரிந்ததே.

(ஐ-7-11)

# தபால் அதிபர் ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை இன்று

சண்டிலிப்பாய், ஜூலை 23

தபால் அதிபர் தரம் இரண்டு பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக கடந்த 1996 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற 15 தபால் திணைக்கள சிறுபணியாளர்களுக்கான நேர்முகப்பரீட்சை இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். நகரிலுள்ள பிரதி தபால் மாஅதிபர் (வடபிராந்தியம்) அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தமது கல்வித்தராதரப் பத்திரத்தின் மூலப் பிரதியையும், தேசிய அடையாள அட்டையையும் இந்த நேர்முகப் பரீட்சைக்குக் கொண்டு வருமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

# பருத்தித்துறை பிரதேச செயலக காணிக் கொள்வனவுக்கு நிதி

வடமராட்சி, ஜூலை 23

பருத்தித்துறை பிரதேச செயலக கட்டடத்தை நிர்மாணிப்பதற்கானகாணியைக் கொள்வனவு செய்ய அப்பிரதேசத்திலுள்ள 35 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்தும் சுமார் 16 லட்சம் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆகக் கூடுதலாக 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பருத்தித்துறை நகர கிராம சேவகர் பிரிவிலிருந்து சேகரிக்கப்பட்டிருந்தது.

இத்தொகையில் 75 ஆயிரம் ரூபா சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த பருத்தித்துறை இறங்குதுறை தொழிலாளர்களால் சேகரித்து வழங்கப்பட்டது.

இசக்கமுத்து ராஜேந்திரன் (கொழும்பான்) என்ற வர்த்தகரே தனிநபர் சார்பில் 35 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

சில கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து காணிக் கொள்வனவுக்கு நிதி ஏதும் திரட்டப்படவில்லை.

பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 16 லட்சம் ரூபாவுக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போவுக்கு அருகில் சுமார் 12 பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-173)

# தென்மராட்சி முழுவதும் மக்கள் அடுத்த மாதம் குடியமரலாம்!

## அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

தென்மராட்சிப் பிரதேசத்தில் எல்லாப் பகுதிகளிலும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி முதல் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படுவார்கள்.

இவ்வாறு வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தென்மராட்சி மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன், யாழ் அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் ஆகியோர் உட்பட பல்வேறு திணைக்களத் தலைவர்களும், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:–

மக்கள் மீளக்குடியேற வசதியாக அனைத்து வசதிகளையும் ஏற்பாடுகளையும் அதிகாரிகள் உரிய காலத்தில் செய்து முடிக்க வேண்டும்.

கைதடியில் மீளக்குடியேறியோருக்கு தரமற்ற நிவாரணப்பொருள்கள் வழங்கப்படுவதாக பொதுமக்கள் சார்பில் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் வழங்குகின்ற நிவாரணப் பொருள்கள் தரமற்றவையாக பழுதடைந்தவையாக இருந்தால் அவற்றை வாங்காது அது குறித்து உரிய அதிகாரிகளிடம் முறையிட வேண்டும். அரசாங்கம் தரமான பழுதடையாத பொருள்களையே நிவாரணமாக வழங்க வேண்டும்—எனக்கூறினார்.

(ஐ-173)

# சுழற்சிமுறை கடன் உதவி

யாழ்ப்பாணம், நீர்வேலியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 'மகயர்' நிறுவனத்தினால் அண்மையில் 30 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இப்பணம் மேற்படி சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்குச் சுயதொழில் முயற்சியை மேற்கொள்வதற்கெனப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சங்கத்தின் உறுப்பினர்களிடம் இருந்து அங்கத்துவப் பணமாகப் பெற்றுக்கொண்ட 30 ஆயிரம் ரூபாவையும் சேர்த்து மொத்தமாக உள்ள 60 ஆயிரம் ரூபாவை 12 உறுப்பினர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாப்படி சுழற்சிமுறைக் கடனாக வழங்கவுள்ளதாகச் சங்கத்தின் செயலாளர் பி. வசந்தலா தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

# ஜி. சீ. ஈ. மாணவர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 23

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில்கல்விகற்று தற்போது வேறுபாடசாலைகளில் கல்வி கற்கும் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் மாணவர்களையும், இரண்டாவது தடவையாகத் தோற்றும் மாணவர்களையும் (இதுவரை பதிவு செய்யாதவர்கள்) எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் கோண்டாவில் நிரு கல்வி நிலையத்தில் இயங்கும் கல்லூரியில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் எம். நாகேந்திரராஜா கேட்டுள்ளார்.

(ஐ-9)

# மோ.சைக்கிள் சாரதி கைதானார்

ரியூசன் முடிந்து சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவனை மோதிய மோட்டார் சைக்கிளின் சாரதியை புலோலிமேற்கு மாயக்கையில் வைத்து பருத்தித்துறைப் பொலீஸார் கைது செய்ததுடன் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் மீட்டனர்.

பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்தியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் தி. சிவதேவன் (15 வயது) என்ற மாணவன் காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக வரணியிலிருந்து இடம்பெயர்ந்து புலோலி மேற்கு மாயக்கையில் வசிக்கும் மோட்டார் சைக்கிள் சாரதியான கந்தையா சிவகுமார் (22 வயது) என்றிளைஞரை பருத்தித்துறை பொலீஸ் நிலையக் குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர் எம். எஸ். மொகமட் தலைமையிலான பொலீசார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

(ஐ-173)

# தீவுப் பகுதி ஆலயங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

ஊர்காவற்றுறை யூலை 23

ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத பின்வரும் ஆலயங்கள் வடக்கின் மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபையின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்து கலாசார அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகளின் பேரில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தெரிவித்தார்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆலயங்களும்' அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு விவரங்களும் வருமாறு:

### ஊர்காவற்றுறை

★ புளியங்கூடல் இத்தன் பிள்ளையார் கோயில் (3 லட்சம்)

★ தம்பாட்டி முத்துமாரி அம்பாள் ஆலயம் (3 லட்சம்).

★ அனலைதீவு ஐயனார் ஆலயம் (3 லட்சம்)

★ ஊர்காவற்றுறை சிவன் கோயில் (3 லட்சம்)

★ எழுவைதீவு முத்தன் காடு முருகன் ஆலயம் (1லட்சம்)

★ எழுவைதீவு அந்தோனியார் கோயில் (1 லட்சம்)

★ அனலைதீவு அந்தோனியார் ஆலயம் (1 லட்சம்)

★ காரைநகர் மருதபுரம் முருகன் ஆலயம் (2 லட்சம்)

★ கரம்பன் கண்ணகை அம்மன் ஆலயம் புனரமைப்பு (5 லட்சம்)

★ காரைநகர் கல்லந்தாழ்வு முருகன் ஆலயம் (2 லட்சம்)

★ காரைநகர் பெரிய தம்பிரான் ஆலயம் (2 லட்சம்)

★ காரைநகர் சைவமகா சபை புனரமைப்பு (2 லட்சம்)

### வேலணை

★ வேலணை சிவசுப்பிரமணியம் ஆலய கலாசார மண்டபம் அமைத்தல் (5 லட்சம்)

★ மண்கும்பான் பிள்ளையார் ஆலயம் (3 லட்சம்)

★ அல்லைப்பிட்டி சிந்தாமணி பிள்ளையார் கோயில் (2 லட்சம்)

★ புங்குடுதீவு சிவன் கோயில் மின்பிறப்பாக்கி கொள்வனவிற்கு (3 லட்சம்)

★ செட்டிபுலம் ஐயனார் ஆலயம் (2 லட்சம்

★ நயினாதீவு ஞானவைரவர் ஆலயத்திற்கு ஒலிபெருக்கி கொள்வனவு (1லட்சத்து 50 ஆயிரம்)

★ சரவணை செல்லக் கதிர்காமம் ஆலயம் (5 லட்சம்)

★ துறையூர் ஐயனார் ஆலயம் (2 லட்சம்)

### நெடுந்தீவு

★ நெடுந்தீவு ஸ்ரீ பிடாரி அம்மன்கோவில் புனரமைப்பு (3 லட்சம்)

★ நெடுந்திவு பத்திமா கோயில் (3 லட்சம்)

★ நெடுந்தீவு லோறன்ஸ் ஆலயம் (3 லட்சம்)

★ நெடுந்தீவு யுவானியார் ஆலயம் (3 லட்சம்)

★ நெடுந்திவு காட்டம்மன் ஆலயம் (2 லட்சம்)

★ நெடுந்திவு பூதாததேயு யாத்திரிகர்தலம் பனரமைப்பு (2 லட்சம்).

(ஐ-16–7)

# ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டங்கள் இன்று திட்டமிட்டபடி நடக்கும்

கொழும்பு, ஜூலை 23

சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு கோரியும் நாடளாவிய ரீதியில் ஜே.வி.பி. ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்டங்கள் திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை நடைபெறும் என ஜே. வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் குறித்து விமல்வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது:–

அரசுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றும் மக்களின் எண்ணிக்கையையும் பாதுகாப்பு சூழலையும் பொறுத்தே அதனை பேரணியாகவோ அல்லது ஊர்வலமாகவோ கொழும்பில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்படும்.

எமது சாத்வீகமான அமைதியான போராட்டத்துக்கு பொலீஸாரின் அனுமதி தேவையில்லை. எந்த விதமான வன்முறைகளையும் பிரயோகிக்காது நாம் மேற்கொள்ளும் இவ்எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு நாம் பொலீஸாரின் அனுமதியைக் கோரவில்லை.

19 மாவட்டங்களிலும், 22 நகரங்களிலும் எமது போராட்டங்கள் நடைபெறும். கொழும்பில் கடுவெல மற்றும் மகரகம பிரதேசங்களில் எமது ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எமது அமைதிப் போராட்டங்களை தடுக்க பொலீஸாரும் அரசும் முனைந்தால் அரசாங்கம் மோசமான விளைவுகளையே சந்திக்க நேரிடும்.

எவ்வாறாயினும் நாம் அமைதியாக எமது எதிர்ப்பை வெளிக்காட்டுவோம். எமது தொடர்ச்சியான போராட்டங்களில் இது ஒரு நடவடிக்கை மட்டுமே — என்றார்.

[ஐ-7]

# படை அதிகாரியும் சிப்பாயும் காயம்

கொழும்பு, ஜூலை 23

வவுனியா நொச்சிகுளம் பகுதியில் கடந்த புதனன்று பிற்பகல் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் படைத்தரப்பில் அதிகாரி ஒருவரும் ஒரு சிப்பாயும் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-ஒ)

# 2,800 புசல் விதைநெல் தெற்கில் இருந்து தருவிப்பு

அச்சுவேலி, ஜூலை 23

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக 2 ஆயிரத்து 800 புசல் நெல்லின விதை நெல் எடுத்துவரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பமாகவிருப்பதால் தென்னிலங்கையில் இருந்து சிபார்சுசெய்யப்பட்ட நெல்லினமான ஏ. ரி. 303, பி. டபிள்யு 851, ஏ. ரி. 402, எல். டி. 356, ஏ. ரி. 353 ஆகிய விதை நெல் இனங்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

90—105 நாள்களில் விளைவைத் தரக்கூடிய இந்த நெல்லினங்கள் புசல் 680 ரூபா வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

விதைநெல் தேவையான விவசாயிகள் தமது பிரதேசங்களில் அமைந்துள்ள கமநல சேந்திர நிலையங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-11)

உதயன்

## பின்னடைவு

வண்டில் குதிரையின் கண்களுக்கு இரு பக்கவாட்டிலும் மறைப்புக் கட்டுவார்கள். இரு பக்கங்களிலும் தன் சிரத்தையை - கவனத்தை - ஈர்க்கவிடாமல் முன்னோக்கி மட்டும் பார்த்தபடி குதிரை ஓடுவதற்கே இந்த ஏற்பாடு.

இதேபோன்று குதிரையின் முன்னால் தடியில் 'கரட்'டைக் கட்டித் தொங்க விடுவது குறித்தும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். முன்னால் இருக்கும் 'கரட்'டைக் கைப்பற்றும் நோக்குடன் குதிரை ஓடிக்கொண்டே இருக்கும். அதனுடன் சேர்த்துக் கட்டப்பட்ட - 'கரட்'டைக் கொண்ட - தடியும் சேர்ந்து போய்க் கொண்டே இருக்கும்.

இவை குதிரையை ஏமாற்றும் மனித முயற்சிகள்.

இது போலத்தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு புதிய அரசமைப்பு என்ற கரட்டை தனது ஆட்சிக் கட்டு என்ற வண்டியில் பொருத்தி, குதிரையாகிய மக்களை ஏமாற்றி, ஆட்சிக் காலம் முழுவதையும் ஓட்டிக் கழிக்கலாம் என்று கருதியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

முன்னே தடியில் தொங்க விடப்பட்டிருப்பது என்ன என்று கூடத் தெரியாத நிலையில் சில தமிழ்க் குதிரைகள் ஓடத் தொடங்கியிருப்பது எமது துர்லபம்.

ஆனாலும் தமிழர் பிரச்சினையைக் காட்டி, தமிழர்கள் தலையில் மட்டுமல்லாமல் சிங்களவர்கள் தலையிலும் மிளகாய் அரைக்கும் ஜனாதிபதியின் முயற்சிக்கு இடமளிப்பதில்லை என்று தமிழ்க் கட்சிகள் சுதாகரித்துக்கொண்டு புறப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வசதியாக புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவேன் என்ற கோஷத்தை முன்வைத்துத் தான் 1994 ஆம் ஆண்டு முதல் சகல தேர்தல்களிலும் சந்திரிகா அம்மையார் வெற்றியீட்டி வந்துள்ளார்.

இந்த நிலையில் மீண்டும் ஒரு தடவை, அரசமைப்புத் திருத்தத்துக்கு மக்கள் அனுமதி பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று அவசியம்தானா?

அப்படி ஒரு சட்ட ரீதியான அவசியம் - தேவை - உண்டு என்று சிலர் வாதிடலாம். சட்டரீதியான அவசியம் உண்டு என்று வைத்துக்கொண்டால் - இது விடயத்தில் மக்களின் முடிவுக்கு சட்டரீதியான அந்தஸ்து கிடைக்க வேண்டுமானால் - உத்தேச அரசமைப்பு மக்கள் முன் வைக்கப்பட்டு, அது குறித்தே மக்களின் முடிவு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அறியப்பட வேண்டும்.

வாக்கெடுப்புக்கு இன்னும் 30 நாள்களே உள்ளன. இக்குறுகிய காலத்துக்குள் நகல் வரைவு ஒன்றை முழு வடிவில் தயாரிப்பதோ அல்லது அதன் சாதக, பாதகங்களை மக்கள் அக்குவேறு ஆணிவேறாக அலசிப்பார்த்து முடிவு செய்வதோ இயலாதது.

அப்படி இல்லாமல் வெறுமனே "புதிய அரசமைப்பை விரும்புகின்றீர்களா? அல்லது இல்லையா?" என்ற ஒரு கேள்வியை மட்டும் வைத்து நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு, மக்களின் அந்தத் தீர்ப்புக்கு சட்டவலு எதனையும் பெற்றுத்தரப்போவதில்லை.

இது எமது கூற்று அல்ல; கருத்து அல்ல. இந்த அரசின் அமைச்சரவையில் அரசமைப்பு விவகாரங்களுக்கு என நியமிக்கப்பட்டிருக்கும் - சட்டத்துறையில் மிகுந்த அறிவு மிக்கவர் என்று வர்ணிக்கப்படுகின்ற - பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறிய கருத்துக்கள் இவை.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை மக்களை ஏமாற்றும் செயல் என்பது அனைவருக்கும் தெரிந்தது தான். ஆனால் தான் இந்த சர்வஜன வாக்கெடுப்பில் கோரப்படும் கேள்விக்கு எதிராக 'இல்லை' என்று - வாக்களிப்பதான முடிவுக்கு வரும் நிலையில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு உள்ளது.

ஆனால் இது ஏமாற்றும் முயற்சி என்பதைப் புரிந்து கொண்டும் - தங்கள் எஜமான் விசுவாசத்துக்காக - போடும் பிச்சைக்காக - பதவி அந்தஸ்துக்காக - மக்களை ஏமாற்றும் முயற்சியில் சில தமிழ்க் கட்சிகள் களத்தில் இருப்பது தமிழர் தரப்புக்குப் பெரும் பின்னடைவே!

எட்டப்பன் கெட்டித்தனம் நீண்ட நாள்கள் நீடிக்காது!

## ஜி.சீ.ஈ. உயர்தரம்:
# தென்மராட்சி மாணவருக்கு பரீட்சை மண்டபங்கள் மாற்றம்

தென்மராட்சி,ஜூலை23

அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தென்மராட்சிப் பிரதேச பரீட்சை நிலையங்களின் விவரம் வருமாறு:

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டப இல. I, மண்டப இல.II, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் -

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபங்கள் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும் -

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபங்கள் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திலும் -

பளை மத்திய கல்லூரி மண்டபங்கள் அது தற்போது இயங்கும் புலோலி றோ.க.த.க. பாடசாலையிலும் -

இயங்கவுள்ளன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டப இல. 3, மண்டப இல. 4 ஆகியவற்றுக்கு இணுவில் மத்திய கல்லூரியில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## நாட்டு நடப்பு

நந்தினியின் நளினம் தன்னில்
நாதனும் மதிமயங்கிப் போனான்
மந்தபுத்தி மிகுதியினால்
மனம்போல அள்ளிக் கொடுத்தான்
இந்த எழில்மிகுந்த கன்னி
எனக்கென்றே பறை அடித்தான்
தந்திரமாய் அவள் அறியாவண்ணம்
தான் மட்டும் மன்னார் போனான்
நந்தினியின் குழந்தைகளை கணவன்
நலம்பெற வளர்க்கக் கண்டான்.

*- விகடகவி -*

## மீண்டும் கோழித்தீன் உற்பத்தி

அச்சுவேலி,ஜூலை23

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மீண்டும் கோழித்தீன் உற்பத்தியில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

முன்னர் கோழித்தீன் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் அண்மைக் காலத்தில் கோழித்தீன் உற்பத்தியை இடைநிறுத்தி உள்ளது. சங்கத்தின் தலைவராக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பொறுப்பேற்றதை அடுத்து கோழித்தீன் உற்பத்தியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-11)

# நிலுவை உள்ளோரின் மின் இணைப்பை துண்டிக்கும் பணி முழு வீச்சில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம்,ஜூலை23

மின் கட்டணங்களைச் செலுத்தாது நிலுவையாக வைத்திருப்போரது மின் இணைப்புகளைத் துண்டிக்கும் பணி முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாவனையாளர்கள் மின் நிலுவைகளைச் செலுத்தாமல் விட்டிருப்பதால் மின்சார சபைக்குப் பல லட்சம் ரூபா நிலுவையாக இருக்கிறது. இதனால் மின்சாரசபையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நிலுவைகளைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு பத்திரிகை விளம்பரங்கள் மூலம் பல தடவைகள் தெரியப்படுத்தி இருந்தும் பாவனையாளர்களிடம் இருந்து எமது நடவடிக்கைக்குப் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. நிலுவைகள் தொடர்ந்து அதிகரித்தே வருகின்றன.

மின் கட்டணங்களுக்கான பட்டியல்கள் மாதாந்தம் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. கட்டணத்தைச் செலுத்த 30 தினங்கள் அவகாசம் வழங்கப்படுகிறது. அதற்குள் கட்டணத்தைச் செலுத்தாவிட்டால் முன்னறிவித்தல் இன்றி மின் இணைப்புத் துண்டிக்கப்படும் என்று அந்தப் பட்டியலிலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நிலுவைகளைச் செலுத்துங்கள் என்று பாவனையாளர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கூற வேண்டியதில்லை.

மின் நிலுவைகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்வதால் நிலுவை உள்ளவர்களது மின் இணைப்புக்களைத் துண்டிக்கும் பணி கடந்த 18ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கையை மின்சார சபை மிகத் தாமதமாகவே மேற்கொள்கிறது என்பதைப் பாவனையாளர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தற்போதைய சூழற்சி முறை மின்வெட்டுக்காரணமாக மின் பாவனையாளர்கள் மின்சாரத்தின் பலனைப் பூரணமாகப் பெறமுடியாது இருப்பது எமக்குத் தெரியும். ஆனால் அதைக் காரணம் காட்டி நிலுவைகளைச் செலுத்தாமல் இருப்பது வருந்தத்தக்கது. எனவே, நிலுவைகளை உடன் செலுத்தி வீண் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

மின் துண்டிக்கப்படுமிடத்து மீள் இணைப்பைப் பெறுவதற்கு நிலுவைத தொகையை முழுமையாகச் செலுத்துவதுடன் துண்டிப்பு நடவடிக்கைக் கட்டணமாக மேலும் 500 ரூபாவைச் செலுத்தவேண்டும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மின் கட்டணங்கள் நிலுவையாக இருப்போர் உரிய இடங்களில் அவற்றைச் செலுத்திவிட்டு அங்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களை அருகில் உள்ள மின் அத்தியட்சகர் அலுவலகங்களில் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்றும் -

அவ்வாறு பதிவுசெய்து கொள்வதன் மூலம் மின் துண்டிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்து கொள்ளமுடியும் என்றும் -

அந்த அதிகாரி தெரிவித்தார்.

மின் துண்டிக்க வரும் பணியாளர்களிடம் பற்றுச்சீட்டைக் காட்டி மின் துண்டிப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனக் கருதி சிட்டைகளைப் பதிவுசெய்து கொள்ளாது விட்டு விடவேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை -

மின் பாவனையாளர்களுக்கு மின் மானிகளைப் பொருத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும், புதிய மின்மானிகளைப் பெறுவதில் தடை, தாமதங்கள் இருப்பதால் பழைய மின்மானிகளைத் தமது தொழிற்பட்டறைகளில் திருத்தி அவற்றைப் பாவனையாளர்களுக்குப் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## மாவிட்டபுரத்தில் மரங்கள் நடுகை

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில ஆலய சுற்றாடலில் மரம் நடும் நிகழ்வு கடந்தவாரம் இடம்பெற்றது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில ஆலய பிரதம குருவின் ஏற்பாட்டில் நடந்த மரம் நடும் விழாவில் அடியார்கள் மரங்களை நட்டனர்.

இப்பகுதியில் காணப்பட்ட பல பயன்தரு மரங்கள் கடந்த காலங்களில் அழிந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-86)

# அரசியலில் இரண்டு பெண்கள்

**கிழக்கில் மட்டக்களப்பில் இருந்து வெளியாகும் 'தினக்கதிர்' பத்திரிகையில் கடந்த 08-07-2001 வாரப் பதிப்பில் 'இரு மலர்கள்' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள ஆசிரிய தலையங்கம் இது.**

இரு பெண்கள் இரண்டும் வாடா மலர்கள் அரசியலில்!

ஒரு பெண் சிறந்த ஒரு நடிகரைத் திருமணம் செய்து பறிகொடுத்தவர்.

மற்றப்பெண் இளம்வயதிலே நாட்டியம் பயின்று தனது அம்மா வழியிலேயே சினிமாவில் நுழைந்து பல மாறுபட்ட வேடங்களில் நடித்து நடிப்புக்கு வழிகாட்டிய எம்ஜிஆரைப் பின்பற்றி அரசியலுக்கும் வந்தவர்.

அரசியலில் அப்பாவையும் அம்மாவையும் மிஞ்சிவிட வேண்டுமென்ற துடிப்பு முதல் பெண்ணுக்கு.

அரசியலில் தனக்கு எதிரிகளே இல்லாமல் ஓரம்கட்டி ஒழித்துக் கட்டிவிடவேண்டுமென்ற ஆத்திரம் இரண்டாவது பெண்ணுக்கு.

இரண்டு பெண்களுக்கும் வயது கிட்டத்தட்ட சமம் தான். வாழ்க்கை நிலையும் கிட்டத்தட்ட அதுபோன்றதே.

நாட்டில் எந்தப் பிரச்சினைக்கும் தனது தீர்ப்பும், திட்டமும்தான் தீர்வு என்பது முதல் பெண்ணுக்கு. சமாதானம் வரவேண்டுமென்றாலும் தனது திட்டத்தின் மூலமே வரவேண்டுமென்பது அவரது ஒரேதீர்வு.

தன்னைச் சிறையில் அடைத்தவன் எவனாக இருந்தாலும் எந்தப் பெரியவனாக இருந்தாலும் அவனையும், அவன் குடும்பத்தையும் சிறையில் அடைக்காமல் விடமாட்டேன் என்ற பிடிவாதத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய திருப்தி இந்தப் பெண்ணுக்கு.

தன்னை எதிர்த்து தனது அரசின் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவர முனையும் எதிர்க்கட்சித் தலைவரையும் கட்சியினரையும் "பயங்கரவாதிகள்" என்று முடிச்சுப் போட்டு மூச்சுத் திணற வைப்பதென்பது இந்தப் பெண்ணின் சபதம். நாடு குட்டிச் சுவரானாலும் நானே எல்லாம் என்பது எண்ணம்.

முதல் பெண்ணின் அரசியல் ஆவேசத்தினாலும் எதிரியைத் தாக்குவதற்குப் பயன்படுத்தும் ஆயுதத்தினாலும் பாதிக்கப்பட்டு நசுங்குபவர்கள் இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களே.

இரண்டாவது பெண்ணின் நடவடிக்கையால் பாதிக்கப்படுபவர்கள கூட சினிமாவை ரசித்தது போல் இந்தக் காட்சிகளையும் ரசிக்கலாம்.

கதை வசனகர்த்தாவுக்கும், நாட்டிய நடிகைக்கும் தானே போட்டி. காட்சிகள் ரசிக்கத்தக்கவையாகவே இருக்கும்.

இரு பெண்களுக்கும் கவியரசர் கண்ணதாசன் ஏற்கனவே சொல்லி வைத்ததை இப்போது நாம் நினைவூட்டுகிறோம்.

"ஆணவத்தோடு நிமிர்ந்து நிற்கும் தென்னை புயற்காற்றில் விழுந்து விட்டால் மீண்டும் அதனால் எழுந்து நிற்கமுடிவதில்லை. நாணலோ பணிந்து, வளைந்து எந்தக் காற்றிலும் தப்பிவிடுகிறது. அடக்கத்தின் மூலமாகவே தோல்விகளில் இருந்து மீண்டு வெற்றிகரமாக முன்னேறியவர்கள் பலருண்டு".

## கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜூலை23

பளை வணிகர் மன்ற அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு புலோலியில் உள்ள மன்ற அலுவலகத்தில் நடைபெறுமென தலைவர் வை.சற்குணம் அறிவித்துள்ளார். (ஐ-117)

## தொழிலாளி காயம்

பருத்தித்துறை இறங்குதுறையில் இழுவைப் படகிலிருந்து கப்பலுக்குப் பொருள்கள் ஏற்றிக்கொண்டிருந்தவேளையில் இழுவைப் படகுக்கும் கப்பலுக்குமிடையில் கால் அகப்பட்டதில் இரண்டு விரல்கள் துண்டிக்கப்பட்ட இளைஞர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த இராசேந்திரன் மோகன் (வயது 22) என்பவரே காயமடைந்தவராவார். (ஐ-117)

## நாளை

ஆடி 8
செவ்வாய்க்கிழமை
திதி: சதுர்த்தி
பிற்பகல் 4.32 வரை.
நட்சத்திரம் : பூரம்
மாலை 6.33 வரை.
ஆடிப்பூர நன்னாள்
நாகசதுர்த்தி விரதம்
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மனிதனின் உடலைப் பிணைத்திருக்கும் விலங்குகளையும் அறிவைப் பிணைத்திருக்கு விலங்குகளையும் எவர் தகர்த்து எறிகிறார்களோ அவர்களே மனிதர்கள்.

*- மார்க்ஸிம் கார்க்கி.*

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!




யாழ்ப்பாணத்தில் சிதறிப்படும் மிதிவெடிகளில் ஒரு வகை

# நிர்வாகசேவைப் பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகளைத் தளர்த்த வேண்டும்

## எழுதுநர் சேவைச் சங்கம் கோரிக்கை

வலி.தெற்கு,ஜூலை23

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ள இலங்கை நிர்வாக சேவை ஆள்சேர்ப்புப் பரீட்சைக்கு ஓர் அலுவலர் மொத்தமாக இருதடவைக்கு மேல் தோற்றமுடியாது என்ற வர்த்தமானி அறிவிப்பால் அனுபவம், ஆற்றல், நீண்டகால சேவை மூப்புக் கொண்ட பல அரச உத்தியோகத்தர்கள் பாதிப்படைந்துள்ளதால் இந்த நிபந்தனையை மாற்றி முன்னர் இருந்தது போன்று திறந்த போட்டிப் பரீட்சையில் மூன்று தடவையும், மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் ஏழு தடவையும் தோற்றலாம் என்ற விதிமுறையை அமுல்படுத்த ஆவன செய்து தருக.

வடக்கு - கிழக்கு மாகாண பொது எழுதுநர் சேவை அதிசிறப்புத் தர அலுவலர் சங்கத்தினர் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி இணைந்த) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக அமைச்சரை சங்கத்தின் தலைவர் எஸ்.ஆர்.ஜெயபபிரகாசம், உபதலைவர் மெட்ராஸ் மெயில், செயலாளர் எஸ்.புத்திசிகாமணி, பொருளாளர் இநாகராசா உள்ளிட்ட குழுவினர் நேரில் சந்தித்து எடுத்துரைத்தனர்.

இது விடயம் தொடர்பாக தாம் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளதாக மேற்படி சங்கத்தினர் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின் போது அமைச்சருடன் நல்லூர் பிரதேச சபை தலைவர் ந.மணிபல்லவராஜனும் உடனிருந்தார்.

மேற்படி சங்கத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்துள்ள கோரிக்கையில் -

★ இப்பரீட்சைக்கு ஓர் அலுவலர் மொத்தமாக இரு தடவைகளுக்கு மேல் தோற்ற முடியாது என்ற விதியை ரத்துச்செய்ய வேண்டும் -

★ விசேட பரீட்சைகளில் சேவை மூப்பு அடிப்படையிலும், திறமை அடிப்படையிலும் நடத்தப்படும் தேர்வு முறையை அமுல்படுத்தவேண்டும்.

★ நிர்வாக சேவை 'சுப்ரா' (SUPRA) தரத்தில் உள்ளவர்களில் 10 சதவீதமானவர்களை பரீட்சை இன்றி உள்வாங்கவேண்டும் - என்றும் கேட்டுள்ளனர். (ஜ-152)

# குப்பையைக் கூட்டி எரிக்க வெடித்துச் சிதறியது ஷெல்!

## சிதறலால் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை23

கூட்டிய குப்பையைக் கொளுத்திய போது அதனுள் இருந்து பயங்கரச் சத்தத்துடன் வெடித்த ஷெல்லின் சிதறல்களினால் ஒருவர் காயமடைந்தார்.

மட்டுவில், கனகம்புளியடிச் சந்திக்கு அண்மையில் வங்களாவடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கிட்டினன் தவராசா (வயது 38) என்பவரே வயிற்றுப்பகுதியிலும், காலிலும் காயமடைந்தவராவார்.

மட்டுவில் பகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதையடுத்து அப்பகுதி மக்கள் தத்தம் வீடுகள், வளவுகளைத் துப்புரவு செய்யத் தொடங்கியிருப்பது தெரிந்ததே. அவ்வாறு துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையே இச்சம்பவம் நடைபெற்றது.

இதேவேளை -

மற்றொரு பெண்ணான இராசரத்தினம் கனகமணி (வயது 34) என்பவர் கூரை ஓடு தலையில் விழுந்து காயமடைந்துள்ளார். இவரும் வீட்டைத் துப்புரவு செய்துகொண்டிருந்த சமயமே தலையில் ஓடு விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஜ-15)

## பொலீஸாரின் லீவுகள் ரத்து

கொழும்பு,ஜூலை23

சர்வஜன வாக்கெடுப்பை முன்னிட்டு அடுத்தமாதம் 8 ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை பொலீஸாருடைய விடுமுறைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகப் பொலீஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.


ஓகஸ்ட் 21ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பின் போது தேர்தல் கடமைகளில் பொலீஸாரை ஈடுபடுத்த வசதியாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் - ஒவ்வொரு பொலீஸ் நிலையத்திலும் உள்ள பொலீஸாரில் 95 வீதமானோர் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடவேண்டும் எனவும் - பொலீஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஜ-4)

## ஆங்கில எழுத்துப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை23

யாழ்.கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப போட்டிகளில் தனி நிகழ்ச்சிகளின் எழுத்துப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமையும், வாய்மொழிமூலப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமையும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

குழு நிகழ்ச்சிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஜ-7)



காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினால் 'தேர்க்காரர் கந்தையா நிதியம்' என்ற பெயரில் நிதியம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு இந்நிதியத்தினால் மாதாந்தம் ஆயிரம் ரூபா கற்பித்தல் செயற்பாடுகளுக்காக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியத்துக்கான பத்திரத்தை வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், பாடசாலை அதிபர் பண்டிதர் மு.க.வேலாயுதபிள்ளையிடம் பத்திரத்தைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் நல்லியக்கச் சபை செயலாளர் ச.பத்மநாதன் உள்ளார். (ஜ-73)

# YOGI'S CAKE EXHIBITION

எனது மனையியல் வகுப்புகளில்
பயிற்சிபெற்ற மாணவிகளுக்கான

**கேக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்**

எதிர்வரும் **AUGUST** முதல்வாரத்தில் நடத்தத் தீர்மானித்திருப்பதால் என்னிடம் பயின்ற மாணவிகள் அனைவரும் உடன் வந்து சந்திக்கவும்.

அத்துடன் பழைய மாணவிகளும் இக்கண்காட்சியில் பங்கு பற்றலாம்.

**T.Phone : 2796**

ஆசிரியை,
*75, அம்மன் றோட்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

(90316)

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 - 06 - 1940



மறைவு 23 - 07 - 1985

## திருமதி லூட்ஸ் மார்கிறெட் றோஸ் தேவதாஸ்

(சறோஜினி)

ஆண்டு பதினாறோடி முடிந்ததம்மா
ஆனாலும் நின்வதனம் எங்கள் நெஞ்சில்
தூண்டாமணி விளக்காய்த் துலங்குதம்மா!
தூயவளே லூட்ஸ் மார்கிறெட் றோஸே - நாங்கள்
வேண்டாத வினை விட்டு வந்து சேர
வேதமுறை தவறாது வேண்டி வாழ
மாண்டாலும் இயேசுபிரான் பதத்தைச் சேர
மறைஞான முறைமையதில் வாழ வேண்டும்!

*28/1, சோமசுந்தரம் அவனியு,*
*கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*Melbourne, Australia.*

- குடும்பத்தினர்.

(90335)

# ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 25 - 10 - 1965



ஆண்டவன் அடியில் 02 - 08 - 2000

## திருமதி பத்மாவதி சிவகுமாரன்

திதி:- 23-07-2001


பெற்ற வயிறு பற்றி எரியுதம்மா
பெற்ற குழந்தையோ பதறி
அழுகுதம்மா - பத்மா!
பாவி எமன் என் மகளைப்
பாதியிலே பறித்ததினால்
கற்றவர் போற்றிட
களிப்புடனே வாழ்ந்தவளே!
மருத்துவம்தான் உனக்கு
மரணமாக வந்ததுவோ?
கடைசி மகளாய்ப் பிறந்த உன்னை - எம்மை
பாரா முகமாய்ப் பறித்ததுதான் நியாயமோ!

நிரந்தர முகவரி:-
*மாசார்,பளை.*
தற்காலிக முகவரி:-
*முருகமூர்த்தி கோயிலடி,*
*நெல்லியடி.*
(90336)

அம்மா,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள்.

# நீங்கா நினைவுகளில்.....

18ஆம் ஆண்டு



## தனபாலசிங்கம் தேவகுமாரன்

45ஆம் நாள்



## தனபாலசிங்கம் குணபூரணம்மா

1958-03-07 ← மண்ணில் → 1929-01-10
1983-07-23 ← விண்ணில் → 2001-06-10

அண்ணா! அம்மா!

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்,
பிரியாது உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு.

த.விஜயகுமாரி,
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.*
(90342)

உங்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

# மொசாட்டின் உதவிகளை அரசு இனி தக்கவாறு பயன்படுத்த வேண்டுமாம்!

**ஹமாஸ் அமைப்பின் முக்கிய குண்டுத் தயாரிப்பாளரின் கைத் தொலைபேசிக்குள் குண்டினைப் பொருத்தி - வானில் பறந்து கொண்டிருந்த விமானத்தின் மூலம் சமிக்ஞையை அனுப்பி - ஹமாஸ் பயங்கரவாதியை அழித்த இஸ்ரேலின் 'மொசாட்' புலனாய்வுப் பிரிவினருக்கு பிரபாகரன் ஒரு துச்சம் என்கிறார் கட்டுரையாளர் கீர்த்தி வர்ணகுலசூரிய. 15-07-2001 திகதிய ஞாயிறு "திவயின" பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

எவராவது துஷ்ட எண்ணங்களைக் கொண்டிருப்பின்; துர்நடவடிக்கைகளில் ஈடுபடின் வண்டியில் பூட்டப்பட்ட சக்கரங்களைப் போல துன்பங்கள் அவரைத் தொடரும். எவராவது தூய்மையான எண்ணங்களைக் கொண்டிருப்பின்; தூய்மையான செயல்களில் ஈடுபடின் நிழலைப்போல் மகிழ்ச்சி அவரைப் பின்தொடரும் - என்பது பௌத்த போதனை.

இன்று இந்நாட்டில் ஒரு சில அரசியல்வாதிகள் துஷ்ட எண்ணத்துடனேயே செயற்படுகின்றனர். அவர்களுக்கு தேசியப் பாதுகாபபுக் குறித்தோ நாட்டுப்பற்றுக் குறித்தோ அக்கறையில்லை. நாட்டுப்பற்று என்பதே அரசியல் வாழ்க்கை என அக்டன் சாம் என்பவர் தெரிவித்துள்ளார். ஆனால் எமது அரசியல்வாதிகளோ அரசியல் வாழ்க்கை என்பது சுகபோகங்களை அனுபவிப்பதே என எண்ணுகின்றனர். எனவேதான் கொடிய பயங்கரவாதம் மென்மேலும் அச்சுறுத்தலாக அமைந்து வருகிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் நாம் வெற்றிகொள்ள வேண்டும். அதற்கு உதவ எவரும் முன்வருவதில்லை என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன 'ரைம்ஸ்' (TIMES) சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

உலகிலுள்ள எந்தவொரு நாடும் பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை. ஜே.ஆர்.அமெரிக்கா சார்பானவர் எனக்கூறி அவருக்கு 'யங்கிடிக்கி' என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்டது. ஆனால் அமெரிக்க நிர்வாகம் அந்நாட்டுத் தயாரிப்பான 'பெல்' (BEll) ரக ஹெலிகளுக்கான உதிரிப்பாகங்களை ஸ்ரீலங்காவுக்கு வழங்க மறுத்தது. பிரபாகரனுக்கு எதிரான யுத்தத்தில் எந்தவொரு நாடும் ஸ்ரீலங்காவுக்கு ஒத்துழைப்பை வழங்க முன்வரவில்லை. இறுதியில் 'பேயிடம் இருந்து பெறமுடியா விட்டாலும் பேயின் பேர்த்தியிடமிருந்தாவது உதவியைப் பெற வேண்டும்'. எனக் கூறிய ஜே.ஆர்., இஸ்ரேல் நாட்டுடன் நட்புறவை ஆரம்பித்தார். இஸ்ரேலிடமிருந்து ஸ்ரீலங்கா ஒத்துழைப் பைப் பெறுவதை விரும்பாத இந்திய அரசு இந்நாட்டிற்கு அச்சுறுத்தல் விடுத்த போதிலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அதை பொருட்டாக மதிக்கவில்லை.

### பேயின் பேர்த்தி

'பேயின் பேர்த்தி' (இஸ்ரேல்) இந்நாட்டுக்கு வந்து விசேட அதிரடிப் படைப்பிரிவை ஆரம்பித்தார். கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கைகள் இந்த விசேட அதிரடி படைப்பிரிவினால் முடக்கப்பட்டன. 1990 வரை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு (ISRAELI INTEREST SECTION) செயற்பட்டது. 'பெல்' ரக ஹெலிகளுக்கான உதிரிப்பாகங்களைக் கூட அமெரிக்காவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது வழங்கிய இஸ்ரேல், ஸ்ரீலங்கா கடற்படைக்கு அதிவேக 'டோறாப்' படகுகளையும் வழங்கியது. முஸ்லிம் நாடுகளில் இருந்து உதவிகளைப் பெறும் இந்நாட்டு முஸ்லிம் அமைப்புகள் இஸ்ரேலை இந்நாட்டிலிருந்து விரட்டியடிக்க திட்டங்களைத் தீட்டி செயற்பட்டன. ஆர்.பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவியேற்ற கால கட்டத்திலே இந்த முயற்சிகள் இடம் பெற்றன. இஸ்ரேலின் நடவடிக்கைகளை கண்டறிவதற்காக 'மொசாட் ஆணைக்குழு' என்ற பெயரில் ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டது. இந்த ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளித்த தேசியப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் முப்படைகளின் தளபதிகள் இஸ்ரேலுக்கு எதிராக முஸ்லிம் அமைப்புக்கள் எழுப்பும் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை எனத் தெரிவித்ததுடன் புலிகளுக்கு பயிற்சிகள் மற்றும் உதவிகளை வழங்கும் நாடுகளின் பெயர்களை வெளியிட்டனர்.

### துரோகம் செய்தது யார்?

ஆனால் இந்த விவரங்கள் வெளியான போது ஜனாதிபதி பிரேமதாசவின் நிர்வாகத்தால் இஸ்ரேலை வெளியேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முடிவுற்றன. எந்தவொரு நாடும் எமது பாதுகாப்புப் பிரிவுகளுக்கு உதவிவழங்க முற்படாத வேளையில உதவிசெய்ய முன்வந்த இஸ்ரேலுக்கு இந்நிலை ஏற்பட்டது. ஈழவாதிகளுககு போர்ப் பயிற்சிகளை வழங்கியதுடன் அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கியவர்கள் யார்? பலஸ்தீன மக்கள் விடுதலை முன்னனியில் தலைவர் ஜோர்ஜ் ஹபாஷ் என்ற துரோகியே வழங்கினார். "பலஸ்தீனியர்கள் எங்கள் ஆள்களுக்குப் பயிற்சிகளை வழங்கினார்கள்" என புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் கொழும்பில் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்திடம் தெரிவித்த போது, எனக்கு அதுபற்றித் தெரியும் என யசீர் அரபாத் பதிலளித்தார்.

## சிங்களக் கட்டுரையாளர் அரசுக்கு ஆலோசனை

அவ்வாறெனில் சிறிலங்காவுக்குத் துரோகம் செய்தது யார் என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசும் பாதுகாப்பு படைகளுக்குத் தேவையான உதவிகளை இஸ்ரேலிடமிருந்து பெற முயன்றுவரும் வேளையில் முஸ்லிம காங்கிரஸ் தலைமையிலான அடிப்படை முஸ்லிம் அமைப்புக்கள் எதிர்த்தன. இருப்பினும் ஜனாதிபதி அந்த எதிர்புகளைப் பொருட்படுத்தவில்லை. அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் இவ்விடயத்தில் ஒன்றிணைந்தனர். இருந்த போதிலும் இஸ்ரேலின் தலைநகரான டெல் அவிவ் நகரில் சிறிலங்காவுக் கான தூதரகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவுக்கான இஸ்ரேலியத் தூதுவர் டேவிட் மதானி கடந்த வாரம் கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார். பாங்கொக் (தாய்லாந்து) நகரில் இஸ்ரேலியத் தூதுவராகப் பணியாற்றுபவர் ஸ்ரீலங்காவுக்கான இஸ்ரேலியத் தூதுவராக வரவுள்ளார் என்பதை இந்திய அதிகாரிகளும் அறிந்திருந்தனர். இந்தியாவில் பிரசுரமாகும் 'ஏஸியன் ஏஜ்' என்ற பத்திரிகை அந்தத் தகவலை வெளியிட்டதையடுத்து புலிகளின் 'தமிழ் கார்டியன்' பத்திரிகையும் அந்தச் செய்தியை வெளியிட்டது.

டேவிட் மதானி ஸ்ரீலங்காவுக்கான இஸ்ரேலியத் தூதுவராக நியமிக்கப் பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குழப்பமடைந்ததும் அல்லாமல் யூதர்கள் பலஸ்தீன மக்களைப் படுகொலை செய்வதாக அறிக்கை வெளியிட்டார். இஸ்ரேலுடன் யசீர் அரபாத் நட்புறவை ஏற்படுத்தலாம் ஆனால் நாங்கள் இஸ்ரேலுடன் நட்புறவை ஏற்படுத்துவது நல்லது அல்ல எனக்கூற முஸ்லிம் காங்கிரசுக்கு எதுவித உரிமையும் இல்லை பல லட்சம் முஸ்லிம் மக்கள் வாழும் இந்தியா கூட இஸ்ரேலுடன் நட்புறவை ஏற் படுத்தியுள்ளது. ஆனால் இந்தியா முஸ்லிம் மக்களின் கருத்தை அறிய முனையவில்லை. பதிலாக தேசியப் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டது.

பிரபாகரன் ஹமாஸ் அமைப்புடன தொடர்புகளை கொண்டுள்ள போது - ஜோர்ஜ் ஹபாஸ்கள் ஈழவாதிகளுக்குப் பயிற்சிகளை வழங்கும் போது - முஸ்லிம் காங்கிரஸ் குரல் ஏதும் எழுப்பவில்லை. ஆப்கான் முஜாகுதீன் கெரில்லாக்கள் புலிகளுக்கு 'ஸ்டிங்கர்' ஏவுகணைகளை வழங்கிய போது ஹமாஸ் பயங்கரவாதிகள் புலிகளுக்கு வெடி பொருள்களையும் வேறு ஆயுதங்களையும் வழங்கியபோது இந்த முஸ்லிம் காங்கிரஸ் எங்கே போனது?

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னனி என்ற பெயரில் முளைத்த அமைப்பு இன்று புலிகளுக்காகக் குரல் எழுப்பும் கட்சிகளுடன் இணைந்து கொழும்பில் ஹர்த்தால் நடவடிக்கைகளில் இணைந்துள்ளது. இந்நிலையில் கல்முனைக்கு தனியான மாவட்டம் கோரி நாட்டைத் துண்டாட முற்படும் அடிப்படை முஸ்லிம் அமைப்புகளுக்கு இந்நாட்டின் தேசிய பாதுகாப்பைத் தாரைவார்த்துக் கொடுக்க முடியுமா?

ஸ்ரீலங்காவுக்கு துரோகம் இழைத்தவர்கள் ஹபாஷ்கள் ஆவர். யசீர் அரபாத்கூட இதை அறிந்திருந்தார். ஆனால் அவர் என்ன நடவடிக்கையை மேற்கொண்டார்?

'உண்மைத் துரோகிகள் வரலாற்றில் ஒரு நாள் அடையாளம் காணப்படுவர்' என முன்னாள் சோவியத் தலைவர் நிகிட்டா குரு ஷேவ் கூறினார். எங்கள் நாட்டின் துரோகிகள் யார் என்பது தற்போது தெரிய வந்துள்ளது.

1996இல் எமது நாட்டிற்கு 'கிபிர்' தாக்குதல் விமானங்களை வழங்க இஸ்ரேல் முன்வந்தது. யாழ். குடா நாட்டின் மீது புலிகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டதன் பின்னர் 'கிபிர்' விமானங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதை விட விமானி இல்லாத 'றிமோட் கொன்றோல்' விமானங்களையும் ஏவுகணைச் செலுத்திகளையும் இஸ்ரேல் எமது நாட்டுக்கு விற்றது. இஸ்ரேலிடமிருந்து மேலும் 4 தாக்குதல் கப்பல்கள் எமது கடற்படைக்கு கிடைக்கவுள்ளன.

'கிபிர்' விமானங்கள் ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்படுவதை தடை செய்ய அமெரிக்காவில் உள்ள ஈழவாதிகள் அந்நாட்டு மேற்சபை உறுப்பினரைக் கொண்டு அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சிற்கு எதிர்ப்பினைத் தெரிவித்த போதிலும் அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை. இந்த 'கிபிர்' விமானங்களுக்கு அமெரிக்காவில் உள்ள 'ஜெனரல் எலெக்டிக்' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இயந்திரங்களே பொருத்தப்பட்டுள்ளன. எனவே இந்த விமானங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு முன்னர், அமெரிக்காவின் அனுமதியைப் பெற வேண்டும்.

### தமிழ்க் கட்சிகளின் ஹர்த்தால்

இதற்கிடையில் இம்மாதம் 6 ஆம திகதி புலிகள் மீதான தடை நீங்கும் எனப் புலிகளுக்காகக் குரலெழுப்பும் தமிழ்க்கட்சிகள் எதிர்பார்த்த போதிலும் அது கைகூடவில்லை இருப்பினும் எமது ஆள்கள் (சிங்களவர்கள்) ஆளுக்கு ஆள் அடிபட்டுக் கொண்டிருந்த வேளையில் தமிழ்க் கட்சிகள் ஹர்த்தலை கொழும்புக்கு வரவழைக்க நடவடிக்கை எடுத்தன. தமிழ் மக்களைக் கவர்ந்திழுக்கும் நோக்கில் பாலியல் வன் முறைச் சம்பவங்களுக்கு முக்கியத்துவம் அளித்து நடவடிக்கைகளை ஒழுஙகு செய்யுமாறு கொழும்பிலுள்ள புலிகளின் உளவுப்பிரிவு, உளவாளிகளுக்குப் பணிப்புரை விடுத்தது. அதன படி தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், மலையக மக்கள் முன்னணி, இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், புதிய இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளுடன் தொடர்புடையவர்கள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டதற்குக் காரணம் பொலீஸ் மற்றும் இராணுவத்திற்கு எதிராகத் தமது எதிர்ப்பினைத தெரிவிப்பதற்கே ஆகும்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்காக புலிகளின் இணைய தளமான 'தமிழ்நெற்' மூலம் அதி உச்ச பிரச்சாரங்கள் மேற்கொள்ளப் பட்டன. கடந்த 9 ஆம் திகதி 'தமிழ் நெற்' செய்தியில் பிரதான செய்தியாக மீசாலைப் பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த ராணுவத்தினர் அங்கிருந்த 42 வயது தமிழ் பெண் மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயத்தில் தமிழ் மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காக மற்றுமொரு தகவல் உள்ளடக்கப்பட்டிருநதது. சிப்பாய்கள் அந்தப் பெண்ணின் 82 வயதுத் தாயைக் கூடத் தாக்கினா என்ற தகவலும் சேர்க்கப்பட்டிருந்தது. இந்தச் செய்தியை புலிகளின் இணையத்'தளத்துடன் தொடர்புடைய கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றும் வெளியிட்டிருந்தது. சந்தேகத்தின் பேரில் இரு சிப்பாய்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்த படைத்தரப்பினர் அப்பிரதேசத்தில் புலிகள் நடமாடுவதாகத் தெரிவித்தனர். 'தமிழ் நெற்' இணைய தளத்தை நடத்திவருபவர் முன்னாள் பயங்கரவாதியான தர்மரத்தினம் சிவராம் அல்லது 'தராகி' என்பவர் என்பதை படைத்துறையினர் அறிவர். ஊடகவியலாளர் என்ற போர்வையில் அவர் கொழும்பில் இருந்து பாதுகாப்புத்துறையினருக்கு எதிராகச் செயற்படுகிறார்.

இவர் அன்று தொட்டு இந்நாட்டு பாதுகாப்புத்துறைக்கு எதிராகச் செயற்பட்டுவருகிறார். சட்டதிட்டங்களைப் பொருட்படுத்துவதில்லை. செய்தித் தணிக்கை பற்றிக் கவலைப்படுவதில்லை. புலிகளுக்காக இந்நாட்டிலுள்ள ஒட்டு மொத்த மக்களுக்கு எதிராக துரோகச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்.

'தமிழ் நெற்' இணையதளத்தை நடத்துவதற்காக ஊடகவியலாளர் என்ற போர்வையில் செயற்படும் இந்த நபர் பற்றி ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா என்ன கூறுகிறார்?

சிவராம் யார் என்பதை கொழும்பிலுள்ள தமிழ் ஊடகங்கள் அறியும். அவருக்கு எதிரில் புலிகளை குறைகூறி ஒரு சொல்லைக்கூட கூற தமிழ் ஊடகவியலாளர்கள் முயற்சிப்பதில்லை.

'தமிழ்நெற்' இணையத்தளத்தை நடத்திவரும் சிவராம் புலிகளுக்காகத் தவறான தகவல்களைப் பரப்புபவர் என்பதை அனைவரும் அறிவர்.

கடந்த காலம் முழுவதும் பாதுகாப்புப் படையினர். அவரது செயற்பாடுகளைக் கூர்ந்து அவதானித்து வந்தனர். நள்ளிரவு பணிமனைக்கு வந்து நள்ளிரவே காணாமற்போகும் அவரைப்பற்றி ஊடகத்துறை அறியும்.

ஸ்பானியாவில் பஸ்சியு ஊடகவியலாளர் மேட் உப்ரியா என்பவர் சிவராமைப் போலவே செயற்பட்டார். ஈ.ரீ.ஏ.பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த காரணத்தால் ஸ்பானிய சிவில் நிர்வாகத்தால் உப்ரியா கைது செய்யப்பட்டார்.

### புலிகளின் திட்டம்

இதற்கிடையில் இம்மாதம் 6ஆம் திகதி அதிகாலை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக பிரபாகரன் தயாரித்த திட்டம் கைகூடவில்லை. யாழ்ப்பாணத்தைச் சுற்றி வளைத்து தாக்குதலை மேற்கொள்ளுவதே அவரது திட்டமாகும். (TIGER STRATEGY WAS ENCIRCLE AND ENFEEBLE)

அரசும் எதிர்க்கட்சியும் ஒனறோடு ஒன்று மோதி 'நாட்டின் நிலைமை குழப்பமடையும் வரை காத் திருங்கள் என பிரபாகரன் தனது சகபாடிகளுககுப் பணிப்புரை விடுத்துள்ளார் என யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைகக்கும் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைவிட ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரின் நடமாட்டங்களைத் தீவிரமாகக் கண்காணிக்கும் படி புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பிலுள்ள தங்கள் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளனர்.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்குத் துரோகி என நாமம் சூட்டி அவரை எவ்வாறாயினும் அழிக்க வேண்டும் எனப் பிரபாகரன் கட்டளையிட்டுள்ளார். இவ்வாறு அரசியல்வாதிகள் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு மேலும் உட்பட்டு வரும் வேளையில் யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலையைக் குழப்புவதற்காக புலிகளின் பிஸ்டல் குழுவின் தலைவர் முரளி செயற்படுகிறார் என்ற தகவல் வெளிவந்துள்ளது.

**தமிழில்: கஜனி**

யாழ்ப்பாணத்தில் காரைக்கால் வீதித் தடையில் கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் கிருஷ்ணசாமி திவ்வியன் இந்த முரளி பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளார். வீதித் தடையருகே தப்பி ஓடியவர் முரளியே என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புத் துறையினரால் கைது செய்யப்பட்ட திவ்வியன் புலிகள் சார்பில் 'பொங்கு தமிழ' அல்லது 'தமிழர்களின் எழுச்சி' என்ற நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவராவார். அவரை விடுவிப்பதற்காக யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பாலசுந்தரம்பிள்ளை, விஞ்ஞான பீடாதிபதி குமாரவடிவேல் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் படைத்தரப்பினர் அந்தப் பயங்கரவாதச் சந்தேகநபரை விடுவிக்க மறுத்துவிட்டனர். இதனால் யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டது. திவ்வியன் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு புலிகளின் பிரசாரப் பிரிவினர் மட்டக்களப்பு மற்றும் வவுனியா வளாகங்களுக்குத் தெரிவித்ததை அடுத்து அங்கு மாணவர்கள் எதிர்ப்பினைக் காட்டினர்.

### அமெரிக்கத் தளபதியின் வருகை

இதற்கிடையில் இந்து மாகடல் பிரதேசத்திற்குப் பொறுப்பான அமெரிக்காவின் கட்டளை அதிகாரியான அட்மிரல் டெனிஸ் கட்லர் ஸ்ரீலங்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். 190 யுத்தக் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் 1,400 விமானங்களையும் 2லட்சத்து 13ஆயிரம் கடற்படையினரையும் கொண்ட அமெரிக்காவின் இந்து மாகடல் பிராந்தியத்தின் கட்டளைப்பீடத்தின் மூத்த அதிகாரி ஒருவர் இந்நாட்டிற்கு விஜயம் செய்தது இதுவே முதற்தடவையாகும்.

அவர், ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஜெனரல் றொஹான் தலுவத்த ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். வடககு-கிழக்கில் தனியான அரசு உருவாவதற்கு அமெரிக்கா ஒருபோதும் ஒத்துழைப்பை வழங்காது எனக் கருத்து வெளியிட்ட அவர், சிறிலங்காவில் விசேட படைப்பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் தொடரும் எனவும் தெரிவித்தார். வடக்கில் புலிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல்கள் மேற்கொள்வது தொடர்பாக அமெரிக்கா கவலை தெரிவித்தது குறித்துக் கருத்து வெளியிட அட்மிரல் மறுத்தபோதிலும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த பொறுப்பு மிக்க அதிகாரியான லூவிஸ் அன்சலம் வடக்கில் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதற்கான காரணங்களை வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்திவிட்டார் எனத் தெரிவித்தார்.

அமெரிக்க அட்மிரலின் கருத்துத் தொடர்பாக புலிகளும் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் தமிழ்க்கட்சிகளும் அதிருப்தி அடைந்துள்ளன.

(8ஆம் பக்கம் பார்க்க)

# குப்பிளான் பகுதிக்கு மின் வழங்கப்படவில்லை

## பாரபட்சம் என்கின்றனர் மக்கள்

சுன்னாகம்,ஜூலை23

குப்பிளான் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் போதே தாம் மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்ததாகவும் -

இதுவரை மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் -

அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அயல் கிராமங்களான ஏழாலை, மயிலங்காடு, புன்னாலைக்கட்டுவன் ஆகியவற்றுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. தாம் தொடர்ச்சியாகக் கொடுத்த நெருக்குதல் காரணமாக இரு வருடங்களுக்கு முன்னர் மின் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளதாகவும் -

ஆனால் இதுவரை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ஐ-27)

உ

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

### மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் கும்பாபிஷேக மலர் வெளியீடும்

நிகழும் விஷு வருடம் ஆடிமாதம் 11ஆம் நாள் (27.07.2001) வெள்ளிக்கிழமை மண்டலாபிஷேகம் நடைபெறும்.

**மண்டலாபிஷேக நிகழ்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. 1008 சங்காபிஷேகம் | காலை | 8.00 மணி |
| 2. மாகேஸ்வர பூசை (ஆதி மூல லக்ஷ்மி நாராயண அமுதசுரபி) | நண்பகல் | 12.00 மணி |
| 3. திருக்கல்யாணம் | மாலை | 3.00 மணி |
| 4. பூந்தண்டிகையில் சுவாமி வீதியுலா | மாலை | 5.00 மணி |

**நாதஸ்வரம்**

கானமூர்த்தி குழுவினர் (கோண்டாவில்) — ஜெகநாதன் குழுவினர் (உடுப்பிட்டி)

மஹாகும்பாபிஷேக மலர் வெளியீடு 29.07.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் வருகை தந்து ஸ்ரீ சங்கரத்தாழ்வாரின் அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம். பன்னிரு ஆழ்வார்களுக்கு குருபூசை செய்யவுள்ளோம். பக்தர்கள் ஆலய கரும பீடத்தில் தொடர்பு கொள்க.

*துன்னாலை வடக்கு, புலோலி.* (90321) - அறங்காவலர் சபை.

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

23.07.2001

H A P P Y B I R T H D A Y



### செல்வன் உதயகுமார் சிவரூபன்

உரும்பிராய் "மங்கள பவன்" இல்லத்தைச் சேர்ந்த

**உதயகுமார் - மங்களவதனி தம்பதிகளின்**

**செல்வப்புதல்வன் செல்வன் சிவரூபன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (23-07-2001) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். சிவரூபனை குரும்பசிட்டியைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, மகான் பெரியப்பா, ராணி பெரியம்மா, கிருபா பெரியப்பா, உமா பெரியம்மா, அண்ணாமார், தீனோ, தேஷோ ஆகிய அனைவரும் உரும்பிராய் ஓடையம்பதி கற்பகப் பிள்ளையார் அருளினால் பல்கலையும் கற்றுச் சீருஞ்சிறப்புடனும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*குரும்பசிட்டி, தெல்லிப்பழை.* (90290) கிருபா - உமா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலய மாணவன்

### செல்வன் கந்தையா ரதீஸ்கரன்

அவர்கள் மாகாண மெய்வல்லுநர் போட்டிகளில் தடை ஊன்றிப் பாய்தலில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியதன் மூலம் எமது மண்ணுக்கும், பாடசாலைக்கும், பெருமை சேர்த்துள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரை ஊக்குவித்த எமது அதிபர், ஆசிரியர்களையும் இவரை திருமலைக்கு அழைத்துச்சென்ற ஆசிரியர் திரு. இ. திரவியநாதன் அவர்களையும் போற்றுகின்றோம்.

*தரம் 11 மாணவர்கள்,*
யா/நயினாதீவு ஸ்ரீகணேசா
கனிஷ்ட மகாவித்தியாலயம்.

(90289)

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் சனசமூக நிலையங்களினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெற இருப்பதாகப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## மொசாட்டின்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் 'சீல்' கடற்படைப் பிரிவு (U.S.NAVY'S SEAL) சிறிலங்கா கடற்படைக்காக விசேட படகுப் படைப்பிரிவை அமைப்பதற்கு ஒத்துழைப்புகளை வழங்குதல் மற்றும் சிறிலங்காவில் விசேட படைப்பிரிவுக்கு அமெரிக்க விசேட படைப் பிரிவின் ஆலோசனைகள் கிடைத்தல் ஆகியன தொடர்பாக புலிகளின் உளவாளிகளின் பிரிவு தீவிரமாக அவதானித்த வண்ணம் இருந்தது. இந்தத் தகவல்களை புலிகளின் உளவாளிகளுக்கு வழங்கியவர் அமெரிக்க தூதரகத்துடன் தொடர்புகளை வைத்திருக்கும் 'தமிழ் நெற்' இணையத்தளத்தை நடத்தி வரும் நபராவார்.

### புலிகளின் எண்ணங்கள் பலிக்கவில்லை

இந்த வாரம் பாதுகாப்பு நிலைவரங்களை கவனிக்கும் போது புலிகளின் நோக்கங்கள் சிதைவடைந்த வாரமாகவே தோன்றுகிறது. ஜூலை 6ஆம் திகதி அதிகாலை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த யாழ்ப்பாணம் மீதான உத்தேசத் தாக்குதல் தடைப்பட்டமை, புலிகள் மீதான தடை நீக்கப்படும் என இருந்த நம்பிக்கை தகர்ந்தமை, விமானத் தாக்குதல்களை நிறுத்துமாறு சிறிலங்காவுக்கு இந்தியாவைக் கொண்டு ஆலோசனை வழங்க எடுத்த முயற்சிகள் பலனளிக்காமை மற்றும் அரசாங்கம் வீழ்ச்சியடையும் என எதிர்பார்த்திருந்த எண்ணம் நிறைவேறாமல் போனமை ஆகிய சம்பவங்கள் கடந்த வாரத்தில் புலிகளுக்கு சாதகமாக அமையாத சம்பவங்களில் அடங்குகின்றன. இஸ்ரேல் அரசு சிறிலங்காவுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ள விடயம் புலிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகும். இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் முக்கிய சுலோகமானது "எம்மிடம் உள்ள அனைத்தையும் இஸ்ரேலிய மக்களின் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்துவோம்" என்பதாகும்.

ஹமாஸ் பயங்கரவாதிகள் மீது 'எப் -16' ரக தாக்குதல் விமானங்களைப் பயன்படுத்தி குண்டுகளை வீசுவதை இஸ்ரேல் நிறுத்தவேண்டுமென அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை இஸ்ரேலியப் பிரதமர் நிராகரித்துள்ளார்.

"எங்களால் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இதை அமெரிக்கர்கள் புரிந்துகொள்ள வேண்டும்" என இஸ்ரேலியப் பிரதமர் அமெரிக்க ராஜாங்க செயலர் கொலின் பவுலுக்குத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தொடர்புகளைத் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றங்கள் நிகழ்வதை புலிகள் அறிவர். இஸ்ரேலிடம் உள்ள அதி சக்தி வாய்ந்த செய்மதி இராணுவ தொலைத்தொடர்பு உபகரணத்தின் மூலம் உரையாடல்களைக் கேட்க முடியும் என்ற தகவல் புலிகளின் புலனாய்வுப் பிரிவினருக்கு எட்டியுள்ளது. குர்திஷ் பிரிவினை வாதத் தலைவர் அப்துல்லா ஒகலானைக் கைது செய்யத் துருக்கி நாட்டிற்கு ஒத்துழைப்பை வழங்கியது இஸ்ரேலிய 'மொசாட்' புலனாய்வுப் பிரிவினராகும். இஸ்ரேல் தூதரகம் அமைக்கப்பட்டதை எதிர்த்து எதிர்ப்பை வெளியிடுமாறு புலிகள் கொழும்பிலுள்ள தமிழ் செய்தி ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். அதன்படி ஒரேயொரு பத்திரிகை மாத்திரம் எதிர்ப்பை வெளியிட்டது. சிறிலங்கா அரசும், பாதுகாப்புப் படைகளும் செயற்பட வேண்டிய தருணம் தற்போது உருவாகியுள்ளது. ஹமாஸ் அமைப்பின் முக்கிய குண்டுத் தயாரிப்பாளரின் எடுத்துச் செல்லும் தொலைபேசிக்குள் குண்டைப் பொருத்தி வானில் பறந்துகொண்டிருந்த விமானத்தின் மூலம் சமிக்ஞையை அனுப்பி - ஹமாஸ் பயங்கரவாதியை அழித்த 'மொசாட்' புலனாய்வுப் பிரிவினருக்கு பிரபாகரன் ஒரு துச்சம்.



பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் கரணவாய் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் விவசாயத்தினை மேற்கொண்டுவரும் தென்மராட்சிப் பிரதேச இடம்பெயர்ந்த மக்களுக்கு மண்வெட்டி, வாளி மற்றும் விவசாய உள்ளீடுகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். முன்னாள் கிராம அலுவலர் ஞா.குமாரசாமி விவசாயிகளுக்குப் பொருள்களை வழங்குவதையும் பட்டினிக்கு எதிரான நிறுவனப் பிரதிநிதி திருமதி பத்மநாதன், கிராம அலுவலர் ஆ.சூரியகுமாரன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ-117)

உ

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

### ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா (கண்ணன் பிறப்பு)

மேற்படி விழா 09-09-2001 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவை கோயிலின் அறங்காவலர் சபையே செய்யவுள்ளது. இவ்விழாவுக்கு உதவி செய்ய விரும்பும் பக்தர்கள், அன்பர்கள் ஆலய முகாமையுடன் தொடர்புகொள்க. இவ்விழாவுக்கு நிதி சேகரிப்பதற்கு நாம் எவரையும் பிரதிநிதியாக நியமிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*துன்னாலை வடக்கு, புலோலி.* (90322) - அறங்காவலர் சபை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 - 09 - 1928



மறைவு 23 - 06 - 2001

### அமரர் தாமு சுப்பன்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்**
**தெய்வத்துள் இரண்டறக் கலந்த அன்புத் தெய்வமே!**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

இன்று (23.07.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*பழைய வளவு வீதி,*
*துன்னாலை கிழக்கு,*
*கரவெட்டி.* (90163) - குடும்பத்தினர்.

உ



## நயினாதீவு

### ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## ஆடிப்பூரத் (பூரகர்மா) திருவிழா

### 24.7.2001 செவ்வாய்க்கிழமை

**அம்பிகை அடியார்களே!**

நாளை (24.07.2001) செவ்வாய்க்கிழமை புனித நாளான ஆடிப்பூரத் தினத்தன்று அம்பாளுக்கு காலை விசேட திரவிய அபிஷேகம், 1008 சங்காபிஷேகம், விசேட பூஜை, "பூரகர்மா" (ருதுசாந்தி) தீபாராதனை, திருவூஞ்சல், வேதஸ்தோத்திர திருமுறைப்பாராயணம், புஸ்பாஞ்சலி ஆகியனவும், அதனைத் தொடர்ந்து அழகிய "தாமரைப்பூ" வாகனத்தில் அம்பாள் திருவீதியுலாவரும் அலங்காரக்காட்சியும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு "அமுதசுரபி" அன்னதான சபையினரால், அன்னதான சபை மண்டபத்தில் அன்னதானம் (மாகேஸ்வர பூஜை) வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அன்னையை வழிபாடு செய்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(90239) - ஆடிப்பூரத் திருவிழா உபயகாரர்கள்.

# ஆசிரியர்கள் மனச்சாட்சிப் படி பணி புரியவேண்டியது அவசியம்

## கலாசாலை நிகழ்வில் நீதிவான் உரை

காரைநகர்,ஜூலை23

எதிர்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டிய கடமைப்பாடுடைய ஆசிரியர்கள் மனச்சாட்சியுடன் நடந்துகொண்டால்மாத்திரமே நன்மாணாக்கரை உருவாக்க முடியும்.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த சனிக்கிழமை கலாசாலை உடலாளர் மன்றத் தலைவர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராசா உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மனச்சாட்சியின்படி கடமையாற்றவேண்டும். அவ்வாறு கடமையாற்றுவதன் மூலமே மாணவர்களுக்கு ஆன்மீகத்தைப் புகட்ட முடியும் இன்றைய பிரச்சினைகளுக்கு மூல காரணம் ஆன்மீக கல்வி இல்லாமையே.

இன்றைய நாட்டில் இளைஞர்களிடையே ஏற்படும் முக்கிய பிரச்சினைக்குக் காரணம் அவர்கள் மனச்சாட்சியின் படி நடக்க முற்படாமையே ஆகும். ஆலயங்களுக்கு ஆயிரம் ஆயிரமாகப் பணத்தைச் செலவழிப்பதிலும்பார்க்க மனச்சாட்சியின்படி ஒழுகுவது எவ்வளவோ மேல்.

தற்போது எல்லோரும் ஆங்கிலக் கல்வி முக்கியம் என்று கூறுகிறார்கள். ஆனால் கைத்தொழில் துறையில் முன்னேறிய ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்கப்படுகின்றது.

எனவே மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் போதிப்பதிலும் பார்க்க ஆன்மீகத்தையும் பொருளாதாரத்தையும் கற்பிப்பது சாலச்சிறந்தது - என்றார்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி உரையாற்றுகையில் -

75வருட கால பாரம்பரியத்தைக் கொண்ட கலாசாலையில் வருடா வருடம் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டி இவ்வருடமும் சிறப்பாக நடைபெறுவதைப் பார்க்கும் போது கலாசாலை உன்னத நிலையை இழக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

எமது கலாசாலையில் பயிலும் ஆசிரிய மாணவர்களை எவரும் ஏட்டுக் கல்வியுடன் அனுப்புவதில்லை. பல்வேறு துறைகளிலும் பூரண பயிற்சி அளித்து ஒரு பூரண ஆசிரியர்களாகவே பாடசாலைகளுக்கு அனுப்புகின்றோம் - என்றார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் பிரதி அதிபர் செல்வி வி.வேலுப்பிள்ளை ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (ஐ-73)

# வேலணைப் பிரதேசத்துக்கு மூலதன நன்கொடை நிதி

வேலணை,ஜூலை23

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் சனசமூக நிலையங்கள், பொது நூலகங்கள், மகப்பேற்று, பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் மலசல கூட பராமரிப்பு என்பவற்றுக்காக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் மூலதன நன்கொடை நிதியாக ஒரு லட்சத்து 29 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்நிதியிலிருந்து பிரதேச சபையின் எல்லைக்குள் பதிவு செய்யப்பட்டு, இயங்கிக் கொண்டிருக்கும் சனசமூக நிலையங்களுள் 'அ' தர சனசமூக நிலையம் ஒன்றுக்கு ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபா வீதமும், 21 நிலையங்களுக்கும், 'ஆ' தர சனசமூக நிலையம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

பொது நூலக நன்கொடையாக நூலகங்களுக்கு தலா 18ஆயிரம் ரூபாவும் மகப்பேற்று, பிள்ளைகள் பராமரிப்பு நிலைய நன்கொடை நிதியாக தலா 60 ஆயிரம் ரூபாவும் மலசல கூடப் பராமரிப்பு நன்கொடை நிதியாக தலா 10 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ-7-167)

# முகாமில் 200 பேருக்கு கண் பரிசோதனை

வலிகாமம் தெற்கு,ஜூலை23

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினர் நடத்திய விழிவெண்படலத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாமின் போது 200 பேர்களுக்கு கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சுழிபுரம், சித்தங்கேணி, வடலியடைப்பு, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளில் இருந்து கண்பரிசோதனைக்கென ஏராளமானோர் வருகைதந்த போதிலும் 200 பேருக்கே கண் பரிசோதனைகள் மேற்கொள்ள முடிந்தது.

லயன் வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கண் பரிசோதனை முகாமில் கண்பரிசோதனையை யாழ்.போதனா வைத்தியசாலை கண சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் மேற்கொண்டார்.

சங்கானை ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெற்ற இம்முகாமுக்கான ஒழுங்குகளை சேவைத்திட்டத் தலைவர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா செய்திருந்தார்.

கண்பரிசோதனையின் போது விழிவெண்படலத்தால் பாதிக்கப்பட்ட 25பேருக்கு உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டன.

12 பேர் மேலதிக சிகிச்சைபெற யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கவும், 15 பேருக்கு கண் மருந்துகள் பெற்றுக்கொள்ளவும் சிபார்சுக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

(ஐ-152)

# இந்து மத குருக்களின் வீட்டில் ஓடு பிரித்து பொருள்கள் சூறை!

வலி.தெற்கு,ஜூலை23

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தாவடியில் தற்காலிகமாக வசித்துவரும் ஆலயக் குருக்கள் ஒருவர் வீட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு திருடர்கள் உட்புகுந்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், 22 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் இரண்டு, உடுபுடைவைகள் போன்ற பொருளகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டில் நின்ற மோட்டார் சைக்கிளையும் திருடிச்சென்ற திருடர்கள் அதற்கு பெற்றோல் தீர்ந்துவிட்டதால் அதனை தெருவில் கைவிட்டு விட்டு சென்றுள்ளனர்.

குருக்களும், குடும்பத்தினரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது வீட்டின் ஓடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டினர்.

வீட்டில் படுக்கையைச் சுற்றி ஒருவித வெள்ளைப்பவுடர்கள் தூவப்பட்டிருந்ததாகவும், மயக்கமடையச் செய்தபின் கள்வர்கள் களவாடி இருக்கலாம் எனவும் குருக்கள் தெரிவித்தார்.

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகராலய பிரதமகுருவும், தற்போது மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய குருவுமான சிவஸ்ரீ.ந.இராசேஸ்வரக குருக்கள் வீட்டிலேயே இக்களவு நடைபெற்றுள்ளது.

இக்களவு சம்பந்தமாக சுன்னாகம் பொலீஸில் குருக்கள் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-152)

## மாநாட்டு மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை23

நெடுந்தீவு பிரதேச சபையின் மூன்றாவது ஆண்டு நிறைவு வாழ்த்தியலுரை விழாவும், புதிய மாநாட்டு மண்டபத் திறப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபைத் தலைவர் ஏ.டபிள்யு. அரியநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளரும், முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான என்.மதனராஜன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

முதன்மை விருந்தினர்களாக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி, நெடுந்தீவு ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் கே.நவநீதன் ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமியும், நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகமும் கலந்துகொள்வர். (ஐ-7)

## மாணவர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம்,ஜூலை23

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் கடந்த வருடம் தரம் 10 இல் கல்வி கற்று இடம்பெயர்ந்து தற்போது தரம் 11இல் கல்வி கற்கும் முதலாம் வருட மாணவர்களும் -

இரண்டாவது தடவையாக ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் தமது பெயர் விபரங்களை வல்வை சிவகுரு வித்தியாலயம் அல்லது நெல்லியடியில் உள்ள அதிபரின் அலுவலகத்தில் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் செ.சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

(ஐ-7)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

வடமராட்சி,ஜூலை22

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 35 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.43 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கான ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், சிவாகம கிரியாநிதி பிரமஸ்ரீ சி. சுரேஸ்வரக்குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

ஆசிரியர் ஆ.சிவநாதன் தலைமையில் அன்றைய தினம் நடைபெறவுள்ள 'தேர்மலர்' வெளியீட்டு விழாவில் அதிபர் கி.நடராசா வரவேற்புரை நிகழ்த்துவார். பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் வாழ்த்துரை வழங்குவார்.

மலர் வெளியீட்டுரையை ஜப்பானியப் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார். தொடர்ந்து நடைபெறும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் பாராட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்தவுள்ளார்.

இறுதியாக திருப்பணிச் சபையின் சார்பில் அதன் உபதலைவர் சு.கணபதிப்பிள்ளை உரையாற்றுவார். (ஐ-10-173)

## கல்விச்சாலைக் காட்சிகள்



தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவநர் தினமும் அண்மையில் வித்தியாசாலை அதிபர் பா.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றன. பிரதம அதிதியாக கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம். (ஐ)
*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராஜாவுடன் சிறப்பு விருந்தினரான யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.ஜே.விஜயரத்தினம், வித்தியாலய அதிபர் திருமதி எஸ்.சண்முகானந்தன், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி ஜே.விஸ்வநாதசர்மா, பிரதி அதிபர் எஸ்.சிவபாதசுந்தரம் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-51)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெற்ற 'புத்தாக்க புதுயுகம்' காணும் கல்விக் கண்காட்சியை பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை பிரதி அதிபர் செல்வி தனம் வேலுப்பிள்ளை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் ஆகியோர் உள்ளனர். (ஐ)
*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*



குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகாவித்தியாலய நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா அண்மையில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. மேற்படி பாடசாலையை தனது இருபதாவது வயதில் நிறுவி நாற்பது ஆண்டுகள் அதிபராய் இருந்த பேராசான் அமரர் பொன். பரமானந்த சற்குருவின் உருவப்படத்தை ஓவியமணி செ.வரதராஜன் வரைந்துள்ளார். அப்படத்தை ஓவியரிடமிருந்து பாடசாலை அதிபர் க.சிவதாசன் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (ஐ-133)



# தமிழ்த் திரையுலகின் சிகரம் சாய்ந்தது!





**நடிப்பு... நடிப்பு.... நடிப்பு....** என நடிப்பை ஒரு யாகமாகவே கருதி வளர்த்த விழுப்புரம் சின்னையா கணேசன் என்ற - வி.சி. கணேசன் என்பதே இயற்பெயராக இருந்தாலும் பெரும்பாலோருக்கு அந்தப் பெயர் அறியாமல் போய் - தான் தாங்கிய வேடத்தின் பெயரால் அழைக்கப்படும் பெருமை பெற்ற சிவாஜி கணேசன் என்ற - நடிப்பின் இமயம் நிரந்தரமாகவே சாய்ந்துவிட்டது.

தமிழ்த் திரையுலகின் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது....

தனது 10ஆவது வயதில் அரிதாரம் பூசத் தொடங்கிய நடிகர் திலகத்தின் சிம்மக் குரல் அடங்கிவிட்டது.....

இந்திய அரசியல் தலைவர்கள் முதல் சாதாரண குடிமகன் வரை தனது நடிப்பால் அனைவரையும் கவர்ந்த சிவாஜி கணேசன் - சினிமா பல்கலைக்கழகம் - தான் நடித்த திரைப்படங்களை மட்டும் திரையுலகினருக்கு நடிப்புப் பாடங்களாக விட்டு விட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காத அவரது திரைப்படங்களைப் போலவே, சமூகத்தின் சாதாரண நிலையில் இருந்து பிரான்ஸ் அரசின் மதிப்புமிக்க 'செவாலியே' விருதைப் பெறும் அளவிற்கு - நடிப்பாற்றலால் உயர்ந்த - சிவாஜியின் வாழ்க்கையும் எதிர்பாராத திருப்பங்களையும், சோகங்களையும் சந்தோஷங்களையும் கொண்டதுதான்.

### விழுப்புரத்தில் பிறந்தார்

சென்னையை அடுத்துள்ள விழுப்புரத்தில் 1928ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி பிறந்தார் கணேசன்; சின்னையா - ராஜமணி அம்மாள் தம்பதியினரின் எட்டுக் குழந்தைகளில் நான்காவது மகனான அவர் விழுப்புரத்தில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார்.

ஆனால் குடும்பச் சூழ்நிலை காரணமாக கணேசன் பத்தாவது வயதில் நாடகக் குழு ஒன்றில் சேர்க்கப்பட்டார்.

அப்போதைய காலகட்டத்தில் ஊர் ஊராகச் சென்று நாடகம் நடத்தும் குழுக்களில் உள்ளோர் நாடகக் குழுவையே தமது வீடாகக் கருதி அங்கேயே தங்கி, மூத்தவர்களுக்குப் பணிவிடை செய்து, கலை கற்று வருவது வழக்கம்.

இப்படித்தான் பாலகனான கணேசன் 10 வயதில் பொன்னுசாமி என்பவர் நடத்தி வந்த ராஜகான சபாவில் சேர்க்கப்பட்டார்.

அங்கு பணிவிடைகள் செய்தபடி, நடிப்பு, பாட்டு உட்பட கலைகளைக் கற்று வந்த கணேசன் - இறைவன் அவரைப் பிறவிக் கலைஞனாகப் படைத்த காரணத்தால் - விரைவிலேயே நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார்.

மீசை அரும்பாத பால் வடியும் முகமும், அந்த வயதுக்குரிய குரலும் கணேசனை பெண் வேடங்களில் சோபிக்க வைத்தன.

அந்தக் காலகட்டத்தில் கணேசனுடன் நடித்த மற்றொரு பாலகன் பின்னாளில் நடிகவேள் என்று புகழப்பட்ட அமரர் எம்.ஆர்.ராதா அவர்கள்.

நாடக உலகின் பாடும் திறமை, நளினமான நடிப்பு ஆகியவற்றினால் அந்த வயதிலேயே நாடக ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றார் கணேசன்.

நடிப்பு அவருக்குப் பிடித்திருந்தாலும், நாடகக் குழுவில் இருந்த மூத்தவர்களின் நடவடிக்கைகளால் வெறுப்புற்ற கணேசன், நாடகக் குழுவில் இருந்து விலகி திருச்சி சென்று வாகனங்களைத் திருத்துமிடத்தில் சிறிது காலம் பணியாற்றினார்.

தான் நாடகக் குழுவில் இருந்து விலகியது குறித்து அவர் ஒரு பேட்டியில் கூறும் போது.....

"....கதாநாயக நடிகர் உட்பட மூத்தவர்களுக்கு எண்ணெய் தேய்த்துவிடுவது, கால் பிடித்துவிடுவது உட்பட எல்லாப் பணிவிடைகளையும் செய்யவேண்டும்.

அதைவிட அவர்களினால் வேறு சில இம்சைகளும் இருந்தன......" என்று தெரிவித்திருந்தார்.

ஆனாலும் பின்னாளில் நடிப்புக்கு இலக்கணம் வகுக்கும் கடமை, கணேசனை மீண்டும் நடிப்பின்பால் ஈர்த்தது.

மீண்டும் கணேசன் பால நாடக மன்றத்தில் இணைந்தார். மேடைகள் கணேசனின் நடிப்பால் புதுமெருகு பெற்றன.

### மராட்டிய மன்னன்

1946ஆம் ஆண்டு......

சுயமரியாதை இயக்கம் தமிழ் நாட்டில் எழுச்சி பெற்ற காலம். அப்போது நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் அறிஞர் அண்ணாவின் 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' நாடகம் இடம்பெற்றது. மராட்டிய மாவீரன் சிவாஜியாக நடித்த - இல்லை சிவாஜியாகவே வாழ்ந்து காட்டிய - அந்த இளைஞனின் நடிப்பு அனைவரையும் கவர்ந்தது.

நாடகத்தின் முடிவில் -

ஈ.வே.ரா. பெரியார், "நான் இந்த மேடையில் வி.சி.கணேசன் என்ற நடிகனைக் காணவில்லை. மராட்டிய



வீரர் சிவாஜியையே கண்டேன்" என்று கூறிப் பாராட்டினார்.

அன்று முதல் வி.சி.கணேசன் சிவாஜி கணேசன் ஆனார். பட்டி தொட்டியெங்கும் அவரது சிம்மக் குரல் வசனங்கள் வேதங்களாகின.

ஆம்...

அதுவரை புராணக் கதைகளை பழந்தமிழில் பேசிய தமிழ்த் திரையுலகில் புதுரத்தம் பாய்ச்சிய 'பராசக்தி' வெளிவந்தது.

கலைஞர் கருணாநிதியின் புரட்சிக் கருத்துக்களை தன் சிம்மக் குரலில் கனல் பறக்கும் வசனங்களாகப் பேசி, பராசக்தியில் கதாநாயகனாக அறிமுகமானார் சிவாஜி கணேசன்.

திராவிட கொள்கைகள் சிவாஜியின நாடகங்களின் மூலம் பரப்பப்பட்டன.

1952ஆம் ஆண்டு...

"... கோயிலில் குழப்பம் விளைவித்தேன். கோயில் கூடாத இடமென்பதற்காக அல்ல. அது கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக்கூடாதென்பதற்காக..."

"தங்கையின் பெயரோ கல்யாணி. மங்களமான பெயர். அவளை வாழவிடவில்லை சமூகம் ஓடினாள்... ஓடினாள்... வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடினாள்..."

அறிஞர் அண்ணாவும், மு.கருணாநிதியும் தமிழை எப்படி எழுத வேண்டும் என்று சொல்லித் தந்தார்கள் என்றால், அந்தத் தமிழை எப்படிப் பேச வேண்டும் என்று சொல்லித் தந்தவர் சிவாஜி என்று சொல்வார்கள் தமிழ்த் திரையுலகினர்.

மனோகரா, பழனி என்று படங்களின் வரிசை விரிந்தது. சிவாஜியின் புகழைப் போலவே.

இந்தச் சமயத்தில் தமிழ்த் திரையுலகின் மற்றொரு சரித்திரமான எம்.ஜி.ஆரும் திரையுலகுக்கு அறிமுகமாகி வளர்ந்தார். அவர் காங்கிரஸ் அனுதாபியாக இருந்தார். ஆனால் அறிஞர் அண்ணாவின் அழைப்பால் எம்.ஜி.ஆர். திராவிட இயக்கத்தின் அனுதாபியானார். இதனைத் தொடர்ந்து, கருணாநிதி வசனம் எழுதிய படங்களில் எம்.ஜி.ஆர். நடிக்கத் தொடங்க, சிவாஜி காங்கிரஸின் - குறிப்பாக பெருந் தலைவர் காமராஜரின் தொண்டரானார். அரசியல் ரீதியாக அவரை எதிர்த்தவர்கள் கூட அவரது நடிப்பை குறை சொல்லவில்லை.

### பாடங்களாகிய படங்கள்

வீரபாண்டிய கட்டப்பொம்மன், சேரன் செங்குட்டுவன், கப்பலோட்டிய தமிழன், திருப்பூர் குமரன், பாரதியார், கர்ணன் என்று சரித்திரமானவர்களின் பெயர்களைச் சொன்னாலே சிவாஜியின் முகமே மனதில் நிழலாடும் அளவுக்கு ரசிகர்களைத் தனது நடிப்பால் கவர்ந்தவர் சிவாஜி.

இவற்றைத் தவிர -

தங்கைக்காக வாழ்ந்த 'பாசமலர்' தியாகு, நாதஸ்வரத்தை உயிராக மதித்த 'தில்லானா மோகனாம்பாள்' சிக்கல் சண்முகசுந்தரம், கடமைக்காக மகனையே கட்டுக்கொன்ற 'தங்கப் பதக்கம்' எஸ்.பி. சௌத்ரி... என்று சிவாஜி ஏற்ற பாத்திரங்கள் காலம் கடந்தும் மறையாத சித்திரங்கள்.

அவர் 9 வேடத்தில் நடித்த 'நவராத்திரி', மூன்று வேடங்களில் நடித்த 'தெய்வமகன்' என்பன பல திரைப்படக் கல்லூரிகளில் படங்களாக வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் திரையுலகில் புகழின் உச்சியில் இருந்போதும், நடிப்புப் பணியின் மீது அவர் காட்டிய மரியாதையும், பற்றும் இன்றும் இளைய தலைமுறை நடிகர்களுக்கு வழிகாட்டுகின்றன.

"....விடிகாலையில் 6 மணிக்கு ஷூட்டிங் என்றால் 5.30 மணிக்கே மேக்கப் முடித்துத் தயாராக இருப்பார். அவரைவிட ஸ்பாட்டுக்கு முன்னாலேயே போயிடணும் என்று முயற்சித்தும் இத்தனை வருஷத்தில் ஒரு நாள்கூட அது முடியவில்லை..." இப்படிக் கூறியிருந்தார் சிவாஜியை வைத்துப் பல படங்களை இயக்கிய இயக்குநர் சி.வி. ராஜேந்திரன்.

சிவாஜியின் தொழில் பக்தி பற்றி ஒரு சம்பவம் கூறப்படுகிறது.

'திருவருட்செல்வர்' படப்பிடிப்பின் போது. திருமணக் கோலத்தில் வரும் திருமாலின் காலில் இருக்கும் மெட்டியை, வாயினால் கடித்துக் கழற்றி எடுக்கிறான் கொள்ளையன் ஒருவன். இவ்வாறு காட்சி. திருமாலாக நடித்தவர் அப்போது புதுமுகமாக இருந்த நடிகர் சிவகுமார். கொள்ளையனாக சிவாஜி. படப்பிடிப்பு நடந்த இடம் அழுக்கும் சேறும் நிறைந்த புழுதித் திடல். போதாக்குறைக்கு அப்பகுதி மக்கள் அந்த இடத்தையே திறந்த வெளி மலசலகூடமாகவும் உபயோகித்து வந்தனர்.

திருமாலாக நடித்தவர் புதுமுகம். அவர் வெறும் காலுடன் அசுத்தமான இடத்தில் நடந்து வருகிறார். ஆகவே மாபெரும் நடிகரான சிவாஜியை சிறிய நடிகரின் பெருவிரலைக் கடித்து மெட்டியைக் கழற்றுமாறு கேட்பது சொல்வது எப்படி என்று திகைத்த இயக்குநர், திருமாலின் காலை மடியில் வைத்துக் கொள்ளையன் மெட்டியைக் கழற்றுவதாக காட்சியை மாற்றியமைத்தார்.

இது சிவாஜியிடமும் கூறப்பட்டு படப்பிடிப்பு ஆரம்பித்தது.

**சிறப்புக் கட்டுரை**

ஆனால் அனைவரும் திகைத்து நிற்க நிலத்தில் அமர்ந்து, நடிகர் சிவகுமாரின் கால் பெருவிரலை - அழுக்கைப் பாராமல் - வாயினுள் வைத்து மெட்டியைக் கழற்றினார் சிவாஜி. சிவாஜி தொழில் மேல் வைத்திருந்த பற்றைப் பார்த்து, படப்பிடிப்புக் குழுவினர் மட்டுமல்ல, வேடிக்கை பார்த்த மக்களும் கரவொலி மூலம் அந்தப் பிறவிக் கலைஞனைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

இத்தகைய தொழில் பக்தியினால் தான் நேற்றைய ரஜினி, கமல் முதல் இன்றைய விஜய் வரை அனைவருடனும் நடித்து, புகழ்பெற சிவாஜியால் முடிந்தது. பழம்பெரும் இயக்குநர்கள் கிருஷ்ணன் - பஞ்சு முதல் இன்றைய பரதன், பாரதிராஜா, பார்த்திபன் வரை இயக்குநர்களின் எதிர்பார்ப்புகளை குறைவின்றி நிறைவேற்றும் நடிகராக அவர் விளங்கினார்.

தனது 50 ஆண்டுகளுக்கும் மேலான திரையுலக வாழ்வில், 9 தெலுங்குப் படங்கள், இரண்டு இந்திப் படங்கள், ஒரு மலையாளப்படம் ஆகியவை உட்பட 275க்கும் மேற்பட்ட படங்களில் 'வாழ்ந்தவர்' சிவாஜி.

இவற்றுடன் மேலும் சில படங்களில் கௌரவ வேடங்களிலும் அவர் நடித்துள்ளார்.

வெளிநாட்டில் படப்பிடிப்பு நடத்தப்பட்ட முதல் தமிழ் படமான 'சிவந்த மண்', தமிழ்த் திரையுலகின் முதல் 'சினிமாஸ்கோப்' படமான 'ராஜராஜ சோழன்' ஆகியவற்றில் கதாநாயகனாக நடித்த பெருமையும் சிவாஜிக்கே உரியது.நடிகர் திலகத்தின் திறமைக்கு வழங்கப்பட்டதன் மூலம் பல விருதுகள் பெருமை பெற்றன.

**- பாமரன் -**

1960இல் எகிப்தியத் தலைநகர் கெய்ரோவில் நடந்த ஆசியத் திரைப்பட விழாவில் 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' திரைப்படம் திரையிடப்பட்டு, சிறந்த நடிகருக்கான விருது சிவாஜிக்கு வழங்கப்பட்டது.

1962-63ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடு அரசின் கலைமாமணி விருது, 66இல் இந்திய அரசின் பத்மஸ்ரீ, 84இல் பத்மபூஷண், 89இல் தமிழக அரசின் எம்.ஜி.ஆர். விருது, 94இல் பூனா திரைப்படக் கல்லூரி விருது. அதே ஆண்டில் நடிகர் சங்கத்தின் கலைச் செல்வம் விருது, 97இல் மத்திய அரசின் திரையுலக அதி உயர் கௌரவ விருதான 'தாதா சாகேப் பால்கே' விருது ஆகியவை சிவாஜிக்கு கிடைத்து பெருமை பெற்ற விருதுகளாகும்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.

### பிரான்ஸின் கௌரவம்

அனைத்துக்கும் சிகரம் வைத்தது போன்று, சக்கரவர்த்தி நெப்போலியன் பொனபாட்டினால் ஆரம்பிக்கப்பட்டதும் -

பிரான்ஸின் கௌரவமிக்க விருதுமான 'செவாலியே' பட்டத்தை நடிகர் திலகத்துக்கு பிரான்ஸ் அரசு 1995இல் வழங்கிக் கௌரவித்தது.

ஆனாலும் இந்திய அரசின் சிறந்த நடிகருக்கான விருது இறுதிவரை சிவாஜிக்கு வழங்கப்படாதது - தீராத குறையாகவே தொடர்வது - தமிழர்களின் துரதிஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

அரசியல் காரணங்களாலேயே, நடிப்பின் உச்சியில் இருந்த சிவாஜிக்கு சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்படவில்லை என்பதே பலரது அபிப்பிராயமாகும்.

### சிவாஜியின் ஏக்கம்

சிவாஜி ஏற்காத கதாபாத்திரங்களே இல்லை என்று தமிழ்த் திரையுலகம் கூறிவரும் நிலையிலும், உண்மையான கலைஞனுக்குரிய ஏக்கத்துடன் சமீபத்தில் ஒரு பேட்டியில் சிவாஜி சொன்னார்....

".....எத்தனையோ வேடங்களை ஏற்று நடித்தும், தமிழ் சமுதாயத்தைச் சீர்திருத்திய பெரியார் வேடத்தை என்றேனும் ஒரு நாள்

(12ஆம் பக்கம் பார்க்க)


மக்களைப் பெற்ற மகராசி - 1957


தில்லானா மோகனாம்பாள் - 1968


தங்கப்பதக்கம் - 1974


முதல் மரியாதை - 1985

# தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து வாக்கெடுப்பைபகிஷ்கரிக்க வேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி அறைகூவல்

கொழும்பு, ஜூலை 23

அடுத்த மாதம் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பை தமிழ், முஸ்லிம் மக்கள் முற்றாகப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று புதிய ஜனநாயகக் கட்சி அறைகூவல் விடுத்துள்ளது.

'இன்றைய அரசியல்நெருக்கடியும் சர்வஜன வாக்கெடுப்பும்' என்ற தலைப்பில் கொழும்பில் அந்தக் கட்சி நடத்திய கருத்தரங்கில் பேசுகையிலேயே அதன் பொதுச்செயலாளர் சி. கா. செந்திவேல் மேற்கண்ட அறைகூவலை விடுத்தார்.

இது தொடர்பாகக் கட்சி எடுத்துள்ள தீர்மானம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய நாடாளுமன்ற ஆட்சி முறையின் கீழ் ஏற்பட்டுள்ள பாரிய அரசியல் நெருக்கடியானது, இந்த நாட்டின் பெரும்பான்மையினரான உழைக்கும் வர்க்கங்களைச் சேர்ந்த மக்களைச் சார்ந்ததோ அன்றி ஒடுக்கப்பட்டு வரும் தேசிய இனங்களின் மீட்சிக்கு வழி வகை காணக் கூடியதோ அல்ல. இது முழுக்க முழுக்க பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளின் அதிகாரத்திற்கான போட்டியேயாகும்.

ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு தனது ஆட்சியை தக்கவைத்து நீடிக்கச் செய்வதற்கு சகல குறுக்கு வழிகளையும் கையாண்டு வருகின்றது. அதேவேளை, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீளவும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்குக் கடும் முயற்சி செய்கிறது.

இத்தகைய இரு பேரினவாத ஆளும் வர்க்க அந்நிய ஏகாதிபத்திய சார்பு சக்திகளிடையே ஏற்பட்டுள்ள அதிகாரத்திற்கான போட்டியில் ஒடுக்கப்படும் அனைத்து மக்களும் எந்தவொரு பக்கத்தையும் சார்ந்து நிற்க முடியாது. குறிப்பாக தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் கடந்தகால நிகழ்கால அனுபவங்களின் ஊடாக, நிதானமாகவும் தூரநோக்குடனும் நடந்து கொள்வது அவசியமாகும். எனவே சந்திரிகாவின் சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது, அதனை முற்றாகப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று புதிய ஜனநாயகக் கட்சி அறைகூவல் விடுக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இரண்டாவது தடவையாக பதவிக்கு வந்து ஒரு வருடம் கூட பூர்த்தியடையவில்லை. அதற்குள்ளாகவே ஆட்சி அதிகாரத்தை இழக்கும் அவல நிலைக்கு அது தள்ளப்பட்டுள்ளது. இது கடந்த ஏழு வருடகால ஆட்சியில் ஏற்கனவே மக்களுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமை மட்டுமன்றி ஜனாதிபதி முறையினால் வழி நடத்தப்படுகின்ற நாடாளுமன்ற ஆட்சியினால் நாட்டின் எந்தவொரு பிரச்சினையும் தீர்க்க முடியாது என்ற உண்மையும் நிரூபித்துள்ளது.

தனது பேரினவாத அகங்காரத்தின் மூலம் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை இழந்துவிட்டது. அதன் மூலம் அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனமை மட்டுமன்றி நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் எதேச்சதிகாரமான முறையில் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி இடை நிறுத்தியும் உள்ளார். அத்துடன் தெளிவற்றதும் திட்டவட்டமற்றதுமான ஒன்றுக்கு சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலமாகப் பதில் அளிக்குமாறு மக்களை அரசாங்கம் கேட்டு நிற்கிறது.

அதேவேளை, தமது பதினொரு வருடகால இருண்ட ஆட்சியின் காலத்தை மறைத்து தாங்கள் பதவிக்கு வந்தால் சகல பிரச்சினைகளையும் இரவோடுஇரவாகத் தீர்த்துவிடப்போவதாகப் பொய் வாக்குறுதிகளையும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வேஷங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துவருகின்றது.

இந்த நிலையிலேயே இந்த இரு பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளுக்கும் மக்கள் தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பை முற்று முழுதாகப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று எமது புதிய ஜனநாயகக் கட்சி வற்புறுத்திக் கூறுகின்றது.

—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## சமய சந்நிதிகளில்

அச்சுவேலி, ஜூலை 23

ஆவரங்கால் ஸ்ரீ நடராஜ இராமலிங்கேஸ்வர ஆலய பார்வத பத்தினி அம்மன் மகோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமையும் தீர்த்தத்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறும். ( ஐ – 11 )

★ ★ ★

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை ஆடிப்பூர உற்சவம் நடைபெறவுள்ளது.

காலை அபிஷேகமும் மாலை 4.30 மணி முதல் வசந்த மண்டபப் பூசையும் சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

கோப்பாய் மத்தி அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவத்தில் இன்று திங்கட்கிழமை இரதோற்சவமும் நாளை செவ்வாய்க்கிழமை புதிதாக அமைக்கப்பட்ட தீர்த்தக் கேணியில் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

வட்டு கிழக்கு, வட்டுக் கோட்டையில் அமைந்துள்ள ரட்டி[illegible] அம்மன் கோயில் மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் முதலாம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(ஐ-29-133)

★ ★ ★

பருத்தித்துறை சிவன் கோயிலில் குடிகொண்டிருக்கும் பார்வதி அம்பாளுக்கான ஆடிப்பூரப்பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

காலை முதல் விசேட அபிஷேக பூசைகளும், தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும்.

[ஐ-15]

★ ★ ★

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆண்டாள் பூர்வகர்மம், திருக்கல்யாணம் இடம்பெற்று ஸ்ரீகிருஷ்ண ஆண்டாள் உள்வீதியுலா வருதலும் இடம்பெறும்.

[ஐ-7]

★ ★ ★

ஏழாலை களபாவ்வாடை வசந்தபுரம் அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூரப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

காலை 7 மணிக்கு விசேட அபிஷேகம், பூசைகள் இடம் பெற்று தொடர்ந்துசிவத்திரு. வ. குமாரசாமி அவர்களின் ''அன்னைக்குகந்த ஆடிப்பூரம்'' என்ற விடயம் பற்றிய சொற்பொழிவு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருதலும், மாகேஸ்வர பூசையும் நடைபெறும். [ஐ-15-752]

## நல்லை கந்தன் உற்சவம் புதன்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஜூலை 23

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஞ்சத் திருவிழாவும் 16ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத்திருவிழாவும் இடம் பெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

உற்சவ காலத்தில் வீதி ஒழுங்கு, குடிதண்ணீர், மலசலகூட வசதிகள், மேடைகள் அமைத்தல் போன்ற பணிகளை யாழ். மாநகர சபை மேற்கொள்ளவிருக்கின்றது.

நாளை மறுதினம் முதல் வீதித்தடைகள் நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றன.

வீதி ஒழுங்குமுறைகள் பற்றிய விவரம் வருமாறு.

★ அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதி.

★ பிராமணக்கட்டுக் குளச் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதி.

★ செட்டித் தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் வடபாகம் என்பன வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருக்கும்.

★ பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாகச் செல்ல அனுமதிக்கப்படும். (ம-4-173)

## மாணவருக்கு

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இருந்து வேறு பாடசாலைகளில் கற்கும், ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சைக்கு முதலாம், இரண்டாம் தடவைகள் தோற்றும் மாணவர்களை இன்று பாடசாலைக்கு வருகை தரும்படி வித்தியாலய அதிபர் பி முத்துலிங்கம் கேட்டுள்ளார்.

## உருவப் படங்கள் திரை நீக்கம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்பகர்த்தாக்களான 25 அங்கத்தவர்களின் உருவப்படத்திரை நீக்கவிழா நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அமுதசுரபி மண்டபத்தில் நடைபெறும்.

1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அமுதசுரபி அன்னதான சபை தொடர்ச்சியாக 41 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. (உ-173)


## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் ஐயாத்துரை

(இளைப்பாறிய அதிபர், கிளி / கண்டாவளை ம. வி.)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைச் சொந்த இடமாகவும் இல. 3, இராமகிருஷ்ண கார்டன், வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான வைத்திலிங்கம் ஐயாத்துரை அவர்கள் (22 – 07 - 2001) ஞாயிறு காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்—வள்ளிஅம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவஞானம்--செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் ஜெயரட்ணம் (கனடா), திருமதி ஜெயந்தா (நியூசிலாந்து), திருமதி வசந்தா (கொழும்பு), ஜெயக்குமார் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி சந்திரலேகா (கனடா), டாக்டர் தவேந்திரன் (ஓமான்), டாக்டர் சுந்தரேசன் (கொழும்பு), டாக்டர் அனுசியா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சந்துரு, திருமதி கவிதா சபாநாதன், திருமதி சுஜாதா சிவநாதன், திலக், தற்சுதன், பிரசாந்தன், ஆர்த்தி, அருண் ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்வின், மயூரி, ராகுல், அக்ஷணா ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, தெய்வயானை, சுப்பிரமணியம், நாகமுத்து, பொன்னம்பலம் மற்றும் குமாரசுவாமி, சிவசங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறுவது பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;

**திருமதி சிவபாக்கியம் ஐயாத்துரை**
(மனைவி)
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

''கற்பகச்சோலை'',
ஜீ. பி. எஸ். வீதி,
கல்வியங்காடு. (90348)

### செல்லப்பா குணரத்தினம்

பண்ணாகத்தைச் சேர்ந்த செல்லப்பா குணரத்தினம் நேற்று (22-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் கிருஷ்ணமூர்த்தி (சுவிஸ்), சச்சிதானந்தன் மூர்த்தி (ஜேர்மனி), கணேசமூர்த்தி, குமரகுருமூர்த்தி (நோர்வே), திருமூர்த்தி, சிவமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உருத்திராதேவி, இந்திரா, சிவனேஸ்வரி (தாதி உத்தியோகத்தர், யாழ். போதனாவைத்தியசாலை), ஜானகி, ஜெயமலர் (ஆசிரியர், தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலை), ஜெயமதி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், திருநாவுக்கரசு, ஆறுமுகம், சோமசுந்தரம் மற்றும் மங்கையர்க்கரசி (மலேசியா) ஆகியோரின் சகோதரரும் நிசாந்தி, நிசாந்தன், முகுந்தன், மயூரி, மயூரன், சகானா, சியானா, சேந்தன், ஜனனி, கஜனி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற தம்பித்துரை அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-07-2001) திங்கள் காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**பிள்ளைகள்**

பண்ணாகம்,
சுழிபுரம். (90351)

## துயர் பகிர்கிறோம்

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய

### வண. K. P. கோவிந்தராஜா

அவர்கள்

எமது மக்களின் நல்வாழ்வுக்கு உழைத்த எமது முன்னாள் முகாமைக்குருவும் பிலிமத்தலாவை இறையியல் கல்லூரி அதிபரும், இலங்கை மெதடிஸ்த திருஅவை மத்திய மாவட்ட சபாசங்கத் தலைவருமாகிய வண. K.P. கோவிந்தராஜா போதகர் அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்களென்று எழுது''
(வெளி. 14:13)

**வண்ணார்பண்ணை**
**மெதடிஸ்த திருச்சபை மக்கள்.**

(90352)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள YAMAHA - 50, சாளி மோட்டார் சைக்கிள்கள், NATIONAL TV (14"கலர்), பெண்கள் லுமாலா துவிச்சக்கரவண்டி ஒன்று என்பன விற்பனைக்குண்டு. கிழமை நாளகளில் 4.00 மணிக்கு பின பார்வை யிடலாம். தொடர்பு:-இல.28, வளாக வீதி, திருநெல்வேலி.

(90337)

## வெளிவந்துவிட்டது

இந்து நாகரிகம், இந்துசமயம்-சுருக்க வினாவிடை - பாகம் 2 இப்போது கிடைக்கிறது. ஆசிரியர்: "கோபபாய் சிவம்" பாகம் 1 கிடைக்காமல் ஏமாந்தவர்கள் பலர். அதனால் உடனே பெற்றுக்கொள்ளுங்கள். பாகம் 1 மறுபதிப்பு விரைவில் வெளிவரும்.

(90191)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

டாஸ்-7 ரக. Black, Brown நிற நாய்க்குட்டிகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. விரும்பியவர்கள் பொ.கமலநாதன், கலையரசு சொர்ணலிங்கம் வீதி, நவாலி தெற்கு என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

(90252)

## தவறிவிட்டது

இல.17, புதுக்குடியிருப்பு, பாஷையூர் எனும் முகவரியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை இரத்தினம் என்பவருடைய விசேட அ.அ. கச்சேரிக்கும் பாஷையூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும்.

(90345)

## மணமகன் தேவை

றோமன் கத்தோலிக்க, 1966இல் பிறந்த, ஆசிரியை தொழில் புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. உத்தியோகம் அல்லது வியாபாரம் பார்ப்பவர்கள் விரும்பத்தக்கது. மாற்றுச் சம்பந்தமும் ஏற்றுக்கொள்ளப்படும். தொடர்பு:- வி.இல.1335, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(90340)

## கோழி முட்டை விற்பனைக்கு

எங்களிடம் கோழி முட்டை மொதமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம். மல்லிகா, 149,மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் அருகில்) யாழ்ப்பாணம்.

(90292)

## பலகை விற்பனைக்கு

(முதிரை, பாலை, (பலகை வகை) தீராந்தி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-கெங்கா, K.K.S. றோட், நூறாம் மரத்தடி, (கொக்குவில் சிவகுடில் முன்பாக).

(90330)

## புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. மற்றும் இறைச்சிக் கோழி, புறொயிலர், கல்பேட்ஸ் என்பனவும் விற்பனைக்கு உண்டு. சே.கிருஷ்ணகுமார், பொன்னாலை வீதி (விதானை வளவு), மானிப்பாய்.

(90269)

## வாடகைக்கு

நல்லூர் பின் வீதியில் இல. 2A, 2B கடைகள் வாடகைக்கு விடப்படும். தொடர்பு:-148,150, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (முட்டைக்கடை அருகில்)

(90339)

## சிறுவன் மிதிவெடியில் சிக்கினான்

யாழ்ப்பாணம்,ஜூலை23

தென்மராட்சிப் பகுதியில் உள்ள தமது காணியைப் பார்த்து வரச்சென்ற ஒருவர் அங்கு மிதிவெடியில் சிக்குண்டு வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்து படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் கல்வயல் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து, கரவெட்டி யார்க்கருப் பகுதியில் வசிக்கும் ஸ்ரீ மோகன் கஜீவன் (வயது 13) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15-173)

## யாழ்ப்பாண மாநகரசபை
## நல்லூர் உற்சவம் 2001 - வீதித் தடை

மேற்படி உற்சவத்தை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் வீதிகள் 25-07-2001ஆம் திகதி தொடக்கம் 20-08-2001ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும்.

இவ்வீதித்தடை நல்லூர் தேவஸ்தானத்தினரின் ஆலோசனையுடன் அமுல்படுத்தப்படுகின்றது.

☆ அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;

☆ பிராமணக் கட்டுக்குளச் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் அப்பாகம்;

☆ செட்டித் தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் வடபாகம்;

☆ பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தையூடாகச் செல்லல்;

☆ (அ) முத்திரைச் சந்தைப் பகுதியிலும், அம்மன் வீதி பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியிலும் பேருந்துகள் தரித்து நிற்கும்;

(ஆ) முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் வீதி, பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியிலும், அம்மன் வீதியிலும் சிற்றூர்திகள் தரித்து நிற்கும்;

(இ) பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் பேருந்துகளும் சிற்றூர்திகளும் செல்லுவது முற்றாகத் தடை செய்யப்படும்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/17524)

## கால்நடைகளுக்கு சத்திர சிகிச்சை

வடமராட்சி,ஜூலை23

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் வளர்ப்பு நாய், பூனைகளுக்கு ஆண்மை நீக்க, கருத்தடை சத்திர சிகிச்சைகள் செய்யப்பட்டு வருவதாக வைத்திய அதிகாரி டாக்டர் சி. வசீகரன் தெரிவித்துள்ளார்.

இதேபோல ஆடு, மாடுகளுக்கும் ஆண்மை நீக்க சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இச்சத்திர சிகிச்சையைகளை மேற்கொள்ள விரும்பும் கால்நடை வளர்ப்பாளர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-173)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை23

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் பொது மக்களுக்கு நீண்டகாலமாக உபத்திரம் கொடுத்து வந்த கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை முற்பகல் பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் எஸ். இராசதுரை வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்புத் பட்டின உபஅலுவலகத்தின் அனுசரணையுடன் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.

-(ஐ-135)

## சணல் செய்கை அமோக விளைச்சல்

சண்டிலிப்பாய்,ஜூலை23

சண்டிலிப்பாய், கட்டுடை ஆகிய பகுதிகளில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட சணல் செய்கை இம்முறை நல்ல விளைச்சலைத் தந்துள்ளது.

தற்போது இப்பகுதிகளில் சணல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஐ-135)

## விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை23

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பின்வரும் இருவர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்களின் உறவினர்களை யாழ். பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துள்ளனர்.

★ பாலசிங்கம் உதயகுமார் (கோவை இல.B 1/71) ஏ.ஜீ.ஏ.லேன், சுன்னாகம், உடுவில்.

★ பாலன் சிவராசா (கோவை இல. B 1/475) மட்டுவில் கிழக்கு, மட்டுவில்.

(ஐ-4)

## மைதானத்துக்கு காணி கொள்வனவு

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக கல்லூரிக்கு கிழக்குப் பக்கத்திலுள்ள எட்டுப் பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட பெரு முயற்சியால் இக் காணிக் கொள்வனவு செய்யப்பட்டது. இரண்டு லட்சத்து 75ருபாவுக்கு இக் காணி கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாக கல்லூரி அதிபர் ச.சிவநேஸ்வரன் தெரிவித்தார்.

(ஐ-135)

## தமிழ்த்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்று நடிப்பதுதான் என் ஒரே ஆசை...."

சிவாஜியின் இறுதி ஆசை நிறைவேறாமல் போனாலும், இதுவரை அவர் ஏற்ற எத்தனையோ வயோதிபக் கதாபாத்திரங்களில் அவரது எண்ணம் நிறைவேறித்தான் இருக்கிறது.

நடிகர் திலகம் நம்மை விட்டுச் சென்றாலும், அவர் நடித்த திரைப் படங்க ளின் மூலம் - நம்மிடையே மட்டுமல்ல - இனிவரும் தலைமுறையினரிடை யேயும் அவர் வாழ்ந்து கொண்டிருப்பார். ★

## திகதியிடாத பதவி விலகல் கடிதத்தை அனுரா ஜனாதிபதியிடம் வழங்கினார்?

சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட வேளை அனுரா பண்டாரநாயக்க திகதியிடப்படாத பதவி விலகல் கடிதம் ஒன்றை ஜனாதிபதி குமாரதுங்காவிடம் கையளித்ததாக 'ராவய' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

பிரபல வர்த்தகரான ஹரி ஜெயவர்த்தன, ஹட்டன் நாஷனல் வங்கியின் தலைவர் கிரிஷாந்த கூரே, சுனித்திரா பண்டாரநாயக்க ஆகியோர் முன்னிலையில் திகதியிடப்படாத பதவி விலகல் கடிதத்தை அனுரா ஜனாதிபதியிடம் கையளித்ததாகவும் 'ராவய' தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை -

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா விரைவில் அமெரிக்க மாநிலமான லொஸ் ஏஞ்சலுக்கு விஜயம் செய்ய இருப்பதாக அவருடன் நெருக்கமான வட்டாரங்கள் கூறியதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அனுரா பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளதாக 'ராவய' பத்திரிகையில் வெளியான செய்தியைச் சுட்டிக்காட்டியுள்ள 'ஐலண்ட்' பத்திரிகை, 'எதிர்க்கட்சிகளிடம் பெரும் பான்மைப் பலம் இருக்கும் போது சபாநாயகர் ராஜினாமாச் செய்தால் அரசாங்கத்தினால் இனனொரு சபாநாயகரைத் தெரிவு செய்ய முடியாது. இதனால் அரசு சிக்கலில் மாட்டிக் கொள்ளும் என்று குறிப்பிட்டிருக்கிறது.

## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட அன்னாசிப்பழம், மங்குஸ்தான், றம்புட்டான் ஆகிய பழங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

ஸ்ரீராம் நாதன் களஞ்சியம்,
213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.No. 2916 (90343)

## கண்ணீர் அஞ்சலி

எமது குடும்ப நண்பர் திரு. சி.ஜெயசோதி (வெள்ளவத்தை)

அவர்களின் அன்புச் சகோதரன்

### சி.இரத்தினசோதி (பெரியராசு)

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*145 51, Nozsbozg,*
*Sweden.* (90344)

அ.ரவீந்திரன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### வண.கே.பி.கோவிந்தராஜா

யாழ்.குடாநாட்டு மக்களின் கண்ணீர் துடைக்கும் பணியில் ஈடுபட்டவரான, பிலிமத்தலாவை இறையியல் கல்லூரி அதிபரும், முன்னாள் மெதடிஸ்த திருச்சபை யாழ்.சேகர முகாமைக் குருவும், முள்ளி தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க உருவாக்கத்தின் காரணகர்த்தாவும், போசகருமான

**அமரர் கே.பி.கோவிந்தராஜா** அவர்களின்

மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

*தலைவா,*
*சகல நிர்வாகிகள், அங்கத்தவர்கள்,*

*ஆனைக்கோட்டை.*
(90347)

முள்ளி தச்சுத் தொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி சூசைமுத்தம்மா பிலிப்பு

பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி மேரி சூசைமுத்தம்மா பிலிப்பு அவர்கள் நேற்றையதினம் (22-07-2001) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் பிலிப்புவின் (கனடா) அன்பு மனைவியும், ஜோசப் கியோமார் (கனடா), வண.பிதா டொன் பொஸ்கோ அடிகளார் (அதிபர் அருள் ஆச்சிரமம் யாழ்ப்பாணம்), திருமதி யேசுமலர் பெனடிக்ற் (இலங்கை மின்சார சபை), அருட்சகோதரி ஜீவமலர் (திருக்குடும்பக் கன்னியர் மடம் - வவுனியா), துரைரட்ணம் (கனடா), திருமதி பற்றிமாமேரி (கனடா), ஜெயரட்ணம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருந்தவராணி, பி.பெனடிக்ற் (A.D.E.-தீவக வலயம்), வதனி, யூலியஸ் தனேந்திரன், மஞ்சு ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆன்கவிதா (உடற்கல்வித்துறை - யாழ்.பல்கலைக்கழகம்), ஜேன் சங்கீதா (2000A/L, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), நொயலின் ஜீவிதா (வே.ம.க), நொயல் ஜீவன், பிலிப் குயின்ரஸ், பிலிப் பிறின்ரஸ், பிலிப் வலன்ரஸ், பிலிப் ஜெயன்ரஸ், பிலிப் ரைற்றஸ், நிறோஷன், நிறோஷினி, நிறஞ்சன், நிசாந்தினி, யூயினி, நிஷான், வில்ஷன், எடிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/1, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்
திருமதி யேசுமலர் பெனடிக்ற்
*(மகள்)*

(C/17523)



*நடிப்பில் சக்கை போடு போட்ட சரித்திரநாயகன்*

## நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

அவர்களின் மறைவு அவரது குடும்பத்தினருக்கும் திரையுலகிற்கும் மட்டுமல்ல, ரசிகர்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய சபரிமலை ஐயப்பனை வேண்டுகின்றேன்.

**காரை மணிகண்டன்** *(ரசிகன்)*

(90349)

# வலி.மேற்கு பிரதேசத்துக்கான நிதி ஒதுக்கீடு

# - 2001 -







வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்துசமய கலாசார அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர் கௌரவ

## கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள்.

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ

## கே.வி.குகேந்திரன் (ஜெகன்)

ஊடாகக் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், ஈ.பி.டி.பியின் இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான

## திரு.ந.திரிலோகநாதன்

### வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் நிதி ஒதுக்கீடு - 2001

## சங்கானை பிரதேச செயலர் பிரிவு

| இல. | ஸ்தாபனம் | அமைவிடம் | வேலைத் திட்டம் | செயற்பாட்டு முகவர் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 1. | சிறி மகா கணபதிப்பிள்ளையார் கோயில் | சித்தன்கேணி | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 300,000.00 |
| 2. | விசவர்த்தனை முருகமூர்த்தி கோயில் | பண்ணாகம் | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 200,000.00 |
| 3. | மயிலியப்புலம் கந்தசாமி கோயில் | அராலி | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 1,000,000.00 |
| 4. | மாமர மோதகப் பிள்ளையார் கோயில் | களவியோடை, வட்டுக்கோட்டை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 600,000.00 |
| 5. | தமிழ்ச் சங்கம் | வட்டுக்கோட்டைத் தொகுதி | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 1,000,000.00 |
| 6. | வழக்கம்பரை சிறி முத்துமாரி அம்பாள் ஆலயம் | சுழிபுரம் | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 700,000.00 |
| 7. | ஹரி ஹர புத்திர ஐயனார் கோயில் | சுழிபுரம் மேற்கு | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 300,000.00 |
| 8. | காந்திஜி ச.ச.நிலையம் | வட்டுக்கோட்டை | புனரமைப்பு | பி.சபை | 1,000,000.00 |
| 9. | சிவப்பிரகாச வித்தியாலயம் | சங்கானை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 1,000,000.00 |
| 10. | சிறி முத்துமாரி அம்பாள் ஆலயம் | இலுப்பையடி, வட்டு.மேற்கு | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 500,000.00 |
| 11. | விக்ரோரியாக் கல்லூரி | சுழிபுரம் | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பா.அ.சபை | 800,000.00 |
| 12. | பெரியதம்பிரான் ஆலயம் | அராலி வடக்கு | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 300,000.00 |
| 13. | இத்தனை வைரவர் கோயில் | அராலி வடக்கு | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 200,000.00 |
| 14. | அடைக்கலந் தோட்டம் கந்தசாமி கோயில் | வட்டுக்கோட்டை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 400,000.00 |
| 15. | இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை | வட்டுக்கோட்டை | கட்டடம் | வ.பு.பு.அ.ச/பா.அ.சபை | 1,000,000.00 |
| 16. | அமெரிக்கன் மிசன் பாடசாலை | அராலி கிழக்கு | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பா.அ.சபை | 1,000,000.00 |
| 17. | அருள்மிகு உலோகசிட்டி பிள்ளையார் கோயில் | அராலி வடக்கு, வட்டுக்கோட்டை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 500,000.00 |
| 18. | புனித பிரான்சிஸ் சலேசியார் ஆலயம் | சங்கானை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 500,000.00 |
| 19. | வட்டு. மத்திய கல்லூரி | வட்டுக்கோட்டை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பா.அ.சபை | 500,000.00 |
| 20. | அராலி ஆவரம்பிட்டி அம்மன் கோயில் | அராலி | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 300,000.00 |
| 21. | கூடத்து மனோன்மணி அம்மன் கோயில் | சங்கானை | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 100,000.00 |
| 22. | சித்தி விநாயகர் கலையரங்கம் | மூளாய் | புனரமைப்பு | வ.பு.பு.அ.ச/பி.சபை | 100,000.00 |
| | மொத்தம் | | | | 12,300,000.00 |

☆ சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மேற்குறிப்பிடப்படாத ஏனைய ஆலயங்கள், சனசமூக நிலையங்களுக்கும் விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

☆ மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான நிதியினை ஒதுக்கீடு செய்தமைக்காக வலி.மேற்குப் பிரதேச மக்களும், நானும் கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"நாம் என்றும் மக்களுக்காக!"

**திரு.ந.திரிலோகநாதன் ஜே.பி.யு.எம்.**

(வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர், ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர், ஈ.பி.டி.பியின் இந்துசமய விவகாரங்களுக்கான பொறுப்பாளர்.)

(C/17525)

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள்:

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் பொலீஸாரைச் சாடுகின்றனர்!

கொழும்பு,ஜூலை23

வியாழனன்று தலைநகரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குதல்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான நிஹால் கருணாரத்ன வெள்ளியன்று பொலீஸ் மா அதிபருக்கு இது தொடர்பாக அனுப்பியுள்ள கடிதத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்தும்படி கேட்டிருப்பதாக 'சண்டே லீடர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இதேவேளை-

மருதானையில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரே பொறுப்பு எனறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஜெரால்ட் இக்னேசியஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

### சிப்பாய் பலி

கொழும்பு,ஜூலை23

வெலிஓயாவில் நேற்றுமுன்தினம் காலை வீதிச் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் ரி81 மோட்டார் குண்டு ஒன்றைக் கண்டு அதைச் செயலிழக்கச் செய்ய முனைந்த சமயம் அது வெடித்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; மற்றும் மூவர் காயம் அடைந்தனர். (ம-3)

### சங்கானையில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சங்கானை,ஜூலை23

வலி.மேற்கு சங்கானை பிரதேச சபை உப அலுவலகத்திற்குட்பட்ட சங்கானைச் சந்தை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கட்டாக்காலி நாய்கள் நாளை செவ்வாய்க்கிழமை நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதாக சங்கானைப் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

இப்பகுதிக்குள் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும், தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் அவர் கேட்டுள்ளார். (ஐ-29)

## மக்கள் ஆணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை எடுக்கப்பட்டுள்ள சந்தர்பங்கள் ஏற்கனவே வரலாற்றில் இடம் பெற்றுள்ளன.

1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் அரசமைப்புக்கு அப்பால் சென்று செயற்பட்டுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட விருக்கின்றது. எனது உயிரை அர்ப்பணித்தாவது நாட்டையும் மக்களையும் பேணிப் பாதுகாக்கப் போகிறேன். இந்த விடயத்தில் தம்மை அர்ப்பணிக்க முடியாத எவரும் தமது விருப்பத்தைத் தெரிவித்துவிட்டு அரசில் இருந்து வெளியேறலாம்.

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்குமாறு ஐ.தே.கட்சி வற்புறுத்தி வருகின்றது. புதிய அரசமைப்பில் ஆணைக் குழுக்களை அமைக்க அரசு முன்வந்துள்ளது. எனினும் ஐ.தே.கட்சி சர்வஜன வாக்கெடுப்பை எதிர்க்கின்றது.

ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மாகாணசபை, உள்ளூராட்சி சபை, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்களை ஒரே சமயத்தில் நடத்தும் வாய்ப்புக்களை புதிய அரசமைப்பு ஏற்படுத்தும்.

தற்சமயம் நடைமுறையில் உள்ள அரசமைப்பு 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட போது தமிழ் அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து இளைஞர்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே அந்த அரசமைப்பை மாற்றுவதற்கு தமிழ்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைப் போலல்லாது ஐ.தே.கட்சி பல்லாயிரக்கணக்கான எதிர்க்கட்சி அங்கத்தவர்களைப் படுகொலை செயவதற்கு தனது அதிகாரங்களைப் பயன்படுத்தியிருந்தது. அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களும் உள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் மதத் தலைவர்களும் சம்பந்தப்பட்டவர்களும் பங்களிப்புச் செய்யவேண்டும்.

தற்போதைய அரமைப்பு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பெற்ற மக்கள் ஆணையை சரிவரப் பிரதிபலிக்கத் தவறி இருக்கிறது. அது ஜனநாயகத்துக்கு முரணானதாகும். மக்களின் அபிலாஷைகளை வெளிபடுத்தக் கூடிய நிர்வாக முறைமை தான் ஜனநாயகத்தை உறுதி செய்ய முடியும்.

பொருளாதாரப் பிரச்சினை எமக்கு மட்டுமல்ல, உலகநாடுகளுக்கும் உண்டு. எனினும் எண்ணெய் விலை, ஆனையிறவுச் சம்பவம் ஆகியவை காரணமாக அரசு 3 ஆயிரத்து 300 கோடியை செலவிட வேண்டியிருந்தது. அவ்வாறு செலவிடாமல் இருந்திருந்தால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்திருக்காது - என்றார் அவர்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க வும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினார். (ம-3-9)

## நடிகர் திலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தும் மூடப்பட்டிருந்தன. திரைப படப்பிடிப்புகளும் ரத்துச் செய்யப்பட்டன.

அன்னை இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த நடிகர் திலகத்தின் பூதவுடலுக்கு நேற்று தமிழகத்தின் பல பாகங்களில் இருந்தும் சென்னை வந்து சேர்ந்த பல ஆயிரக்கணக்கான ரசிகர்களும், திரையுலகத்தினரும் அஞ்சலி செலுத்தினர்.

தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு. கருணாநிதி, காங்கிரஸ் தலைவர் குலாம் நபி ஆசாத் மற்றும் பல மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் ஆகியோரும் மலர் வளையங்கள் வைத்து சிவாஜிக்கு அஞ்சலி செலுத்தினர் .

இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன், பிரதமர் வாஜ்பாய் ஆகியோர் சிவாஜியின் மறைவுக்கு இரங்கல் செய்தி வெளியிட்டனர்.(ம-ஒ)

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் உதவி கோரியதாகப் பொதுமகன் ஒருவர் கொடுத்த தகவலின் பேரில் அந்தப் பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொணடனர்.

தேடுதல் நடத்திய படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். அதனையடுத்து படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்தனர். அவர்களிடமிருந்து இரு கிளைமோர் கண்ணிகள், எட்டு கிரனேட்டுகள் என்பன மீட்கப்பட்டன.

அதேதினம் மாலை 7.45 மணியளவில் கொழும்புத்துறையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது கிரனேட் வீசப்பட்டதில் இரு படையினர் காயம் அடைந்தனர்.

- என்றுள்ளது. (ம-3)

## குடாநாட்டை மீள....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

*யம் செய்து பூஜை, வழிபாடுகள் செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அங்கு கூடியோர் மத்தியில் உரையாற்றிய பிரபாகரன், செப்ரெம்பர் 26 ஆம் திகதி வரும் திலீபனின் நினைவுதினம், இம்முறை புதிதாகக் கைப்பற்றப்படும் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படும் என்று கூறியுள்ளார்.*

*விடுதலைப் புலிகள் முன்னர் நடத்திய பெரும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு முன்பதாக பிரபாகரன் இதேகோயிலில் சமயக் கிரியைகளில் பங்குபற்றியதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.*

### தாக்குதல்

*தகவல்களின்படி யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் அனேகமாக ஜூலை முதலாம், இரண்டாம் வாரத்தில் மேற்கொள்ளப்படும்.*

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மற்றைய விடயங்களுக்கு மத்தியிலேயே விசேட பிரிவின் அறிக்கை வந்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் குவித்து வருவதாக பல வாரங்களாகத் தகவல்கள் வெளியாகிய வணணம் இருந்தன.

இந்த வருடம் ஏப்ரலில் முல்லைத் தீவுக்குப் அப்பால் ஆழ்கடலில் நடந்த சண்டையில் கடற்படையிடம் பிடிபட்ட ஒன்பது புலி கெரில்லாக்களின் மூலம் இது பின்னர் உறுதி செய்யப்பட்டது.

புலி கெரில்லாக்களின் இந்த ஆயுதக் குவிப்பும், தாக்குதல்களுக்கான தயாரிப்பும் -

நோர்வே சமாதான முயற்சியால் ஏற்பட்டுள்ள ஓய்வு நிலையைப் புலிகள் சாதமாகப் பயன்படுத்துகின்றார்கள் என்று பாதுகாப்புப் படைகளின் உயர் அதிகாரிகள் முறையீடு செய்வதற்கு வழிப்படுத்தின.

விசேட பிரிவின் அறிக்கை இவை எல்லாவற்றையும் மாற்றியமைத்தது.

வான் தாக்குதல்களை மீள ஆரம்பிக்க பிரதமர் விக்கிரமநாயக்க அனுமதி வழங்கினார்

அதுவும் -

பூநகரியிலும் நாகர்கோயிலிலும் உள்ள புலிகளின் பீரங்கி நிலைகளை விமானப் படையின் ஆள் இலலாத உளவு விமானங்கள் அவதானித்து அறிவித்த பின்னர்.

### அடையாளம் தெரியாத பொருள்கள்

அத்தோடு, தூபி போன்று மின்னுகின்ற சில அடையாளம் தெரியாத காட்சிப் பொருள்களையும் 'I' எழுத்து வடிவத்திலான கட்டமைப்பையும் வானில் இருந்து எடுத்த படங்கள் காட்டின.

வான் தாக்குதல்கள் நடத்தப்பட்ட சமயம், அது சமாதான முயற்சிகளைப் பாழடிக்கும் என்று அஞ்சுகின்ற சர்வதேச சமூகத்தின் கவனத்தை அத தாக்குதல்கள் ஈரப்பனவாக அமைந்திருந்தன.

### தூதுவர்களுக்கு விளக்கம்

அதனால் முன்னாயத்த நடவடிக்கையாக கொழும்பில் இருந்து இயங்கும் மூன்று தூதுவர்களான அஸ்லி வில்ஸீஸ் (அமெரிக்கா), கோபல் காந்தி (இந்தியா), ஜோன் வெஸ்ட்போர்க் (நோர்வே) ஆகியோருக்கு வான் தாககுதல்கள் ஏன் நடத்தப்படுகின்றன என்று வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விளக்கமளித்தார். தாக்குதல் இடங்களை வரைபடத்தில் காட்டுவதற்காக இராணுவ அதிகாரிகளும் அப்போது கூட இருந்தார்கள்.

ஆனால் யாழ்.குடாநாட்டில் புலிகளின் நிலைகள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தும் அரசின் முடிவு குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டது.

"தன்னுடைய ஆள்புல ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்கு எந்த ஒரு நாட்டிற்கும் உள்ள உரிமையை நாம மதிக்கின்ற அதேநேரம் வன்முறை வனமுறைக்கேவித்திடும் என்ற உண்மையையும் குறிப்பிட விரும்புகின்றோம்" - என்று பொது விவகாரங்கள் தொடர்பான பதில் அதிகாரி வில்லியம் ஹரவ் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சமாதானத்துக்கு வேறு மாற்று இல்லை என்று குறிப்பிட்ட இந்தியா, இந்த நடவடிக்கைகள் குறித்து இறுககமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வருட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் ஆணையை சர்வஜன வாக் கெடுப்பு மூலம் பெறுவது என்றும்-

அதன்பினனர் சகல தரப்பினருடனும் ஆராய்ந்து புதிய அரசமைப்பை வருட இறுதிக்குள் உருவாக்குவது என்றும் -

அமைச்சரவை முடிவுசெய்ததாக ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவித்தார். (ம-3-9)


# விசேட மாலை நேர கணனி வகுப்புகள்

ஆரம்பம்: 25-07-2001 மாலை 6.30 மணி

| Level | | Course | Fee |
|---|---|---|---|
| Level I - | | **Certificate in office Applications** | Fee: 2,000/- Duration: 3Months |
| | 1. | Information Technology - I | |
| | 2. | MS Word 2000/2002 (XP) | |
| | 3. | MS Excel 2000/2002 (XP) | |
| | 3. | MS Power Point 2000/2002 (XP) | |
| Level II - | | **Diploma in office Applications** | Fee: 3,000/- Duration: 3Months |
| | 1. | Information Technology - II | |
| | 2. | MS Windows 98/me/2000 | |
| | 3. | MS Access 2000/2002 (XP) | |
| Level III - | | **Higher Diploma in Computer Applications** | Fee: 4,000/- Duration: 3Months |
| | 1. | Internet and E - mail | |
| | 2. | Object-Oriented Programming Using JAVA/C# | |
| | 3. | Database Management Using SQL | |
| | 4. | Computer Assembling, fault diagnosis and software Installation | |

☆ அலுவலக அதிகாரிகள், ஊழியர்கள், ஆசிரியர்கள், உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்படும் கற்கை நெறிகள் இது என்பது குறிப்பிடத்தக்கது.

☆ அனுபவமும், திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.

☆ இலகுபடுத்தப்பட்ட தவணை முறையிலான கட்டண வசதி.

## Institute of Informatics Studies

(Affiliated to Irish International University)

**No. 100, Clock Tower Road, Jaffna.**

**T.P.No.: 021 - 2831** (C/17526) **emil:iis@sltnet.lk**



வேலணை பெருங்குளம்

## முத்துமாரி அம்மன் கோயில்

### வருடாந்த மஹோற்சவம் - 2001

*கொடியேற்றம்* : 24-07-2001 செவ்வாய்க்கிழமை பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.

*புதிய சப்பறம் வெள்ளோட்டம்:* 01-08-2001 புதன்கிழமை காலை 9.05 மணிக்கும் சப்பறத் திருவிழா அன்று இரவு 12.30 மணிக்கும் இடம்பெறும்.

*தேர்த்திருவிழா* : 02-08-2001 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

**அனைத்துத் திருவிழா நாள்களிலும் அன்னதானம் வழங்கப்படும்.**

☆ பஸ்சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

**- பரிபாலன சபையினர்.**

**பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்,**

***வேலணை.***

(C/17528)


## மரண அறிவித்தல்

### சதாசிவம் டேவிட்

அல்வாய் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி சதாசிவத்தின் மகனும் அருளையா பிளேஸ் கோப்பாயைச் சேர்ந்த செபரத்தினத்தின் மருமகனுமான சதாசிவம் டேவிட் (கிளி) நேற்று (22-07-2001) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் யோஜினா சுகந்தியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை மறுதினம் (25-07-2001) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு விலாசம்:-
**S.V.செபரட்ணம்,**
*44/1/1, இநிசுயம் றோட்,*
*தெஹிவளை.*
01 - 761154

(C/17529)

தகவல்:
**S.R.கணேசராசா,**
**றோய் கொமினிக்கேசன்,**
**அல்வாய் வடக்கு,**
**அல்வாய்.**
**T.P. - 070 - 212590**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.